Saturday மெயில்
සැටඩේ මේල්
A Fa... Weekly Bulletin
01 - 27
03-04-2010
பக்கங்கள்: 24
விலை: 15/=



# மனிதகுல வரலாற்றில் மிகப்பெரிய குடிசன மதிப்பீடு

இந்தியாவில் கடந்த வியாழக்கிழமை ஆரம்பிக்கப்பட்டிருக்கும் 'குடிசன மதிப்பீடு 2011' (Census 2011) மனிதகுல சரித்திரத்திலேயே முன்னென்றுமில்லாத வகையிலான மிகப்பெரிய குடிசன மதிப்பீடு என்று வர்ணிக்கப்படுகிறது. இந்தியாவின் தற்போதைய சனத்தொகை சுமார் 102 கோடி என்று கூறப்படுகிறது. ஆரம்பிக்கப்பட்டிருக்கும் மதிப்பீட்டு ஏற்பாடுகளின் பிரகாரம் இந்திய மக்கள் அவர்களின் பால், மதம், தொழில் மற்றும் கல்வி ஆகிய விபரங்களின் அடிப்படையில் வகைப்படுத்தப்பட்டு பதிவுகள் மேற்கொள்ளப்படவிருக்கின்றன.

11 மாதங்களில் பூர்த்திசெய்யப்படவிருக்கும் இந்த நடவடிக்கைகளின் இறுதியில் தேசிய குடிசன இடாப்பு (National Population Register) ஒன்று முதற் தடவையாகத் தயாரிக்கப்படும். இதில் இந்தியாவில் உள்ள 15 வயதுக்கும் மேற்பட்ட சகலரினதும் புகைப்படங்களும் கைவிரலடையாளங்களும் சேகரிக்கப்பட்டு பயோமெட்ரிக் முறையிலான தேசிய விபரத்தொகுப்பு (Biametric Database) உருவாக்கப்படும். இதற்கு பிறகு சனத்தொகையில் சகலரினதும் விரலடையாளங்கள் பதிவு செய்யப்பட்ட உலகின் முதல் ஜனநாயக நாடாக இந்தியா விளங்கும்.

பத்து வருடங்களுக்கு ஒரு தடவை இந்த குடிசன மதிப்பீடு இனிமேல் மேற்கொள்ளப்படும். இந்தியாவின் பதிவாளர் நாயகம் மற்றும் குடிசன மதிப்பீட்டு ஆணையாளர் சி.சந்திரமவுலி தலைமையில் புதுடில்லியில் உள்ள ராஷ்டிரபதி பவனுக்கு வியாழனன்று சென்று உள்துறை அமைச்சின் உயரதிகாரிகள் முதல் பிரஜையான ஜனாதிபதி

(2ஆம் பக்கம் பார்க்க)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 9 வயதில் திருமணம் 10 வயதில் விவாகரத்து



ஒன்பதே வயதில் கட்டாய திருமணத்தில் சிக்கி வல்லுறவில் வலியை அனுபவித்து 10 வயதில் விவாகரத்துப் பெற்ற யேமன் நாட்டுச் சிறுமி பற்றிய புத்தகம் இப்போது அமெரிக்காவில் பரபரப்பாக விற்பனை ஆகிக்கொண்டிருக்கிறது.

யேமன் நாட்டைச்சேர்ந்த் சிறுமி நுஜாத் அலி. இப்போது வயது 12. இவரது தந்தைக்கு 12 குழந்தைகள். எனவே குடும்ப வறுமை கருதி நுஜாத் 9 வயதில் இருந்தபோதே திருமணம் செய்ய முடிவு செய்தார். அதுவும் நுஜாத்தைவிட 3 மடங்கு அதிக வயதுள்ள யேமன் நாட்டுக்காரருக்கு கட்டாய பால்ய திருமணம் செய்து வைக்கப்பட்டது.

அடுத்த ஓராண்டுக்கு அவள்பட்ட சித்திரவதை, வல்லுறவு அனுபவங்கள், தப்பித்து வெளியேறியது, நீதிமன்றத்தால் விவாகரத்து பெற்றது ஆகியவற்றை நுஜாத்திடம் கேட்டு கதீஜா அல் சலாமி என்பவர் ஆங்கிலத்தில் புத்தகமாக வெளியிட்டுள்ளார். அமெரிக்கா உட்பட சில நாடுகளில் இப்போது அந்தப்புத்தகம் பரபரப்பாக விற்பனையாகி வருகிறது. விரைவில் அரேபிய மொழியில் அது மொழி பெயர்க்கப்பட்டு வளைகுடா நாடுகளில் வெளியாக உள்ளது. அதன் மூலம் சர்வதேச கவனத்தை நுஜாத் அலி இப்போது பெற்றுள்ளார்.

புத்தகத்தில் அவர் கூறியுள்ள சில பகுதிகள்; நான் நுஜாத் அலி.வயது 10. விவாகரத்து ஆனவள். அப்படி என்றால் என்ன என்று தெரியாது. அப்படிச் சொல்லச் சொன்னார்கள். சொல்கிறேன். என்னைப் பற்றிய புத்தகத்தை இன்னும் நான் படிக்கவில்லை .அரேபிய மொழியில் படிப்பேன். ஆனால், எனது கதைப் புத்தகத்தால் உலகம் முழுவதும் பல பெண்களுக்கு என்னுடைய நிலைமை ஏற்படுவது தவிர்க்கப்படும் என்று நம்புகிறேன்.3 மடங்கு அதிக வயதுள்ளவருடன் எனது தந்தை அனுப்பினார். அதை திருமணம் என்றனர். முதல் நாளே நான் சீரழிக்கப்பட்டேன். எனது வலியின் சத்தத்தை யாரும் காதில் கேட்க முன்வரவில்லை. அடுத்த ஓராண்டுக்கு கடும் அடி,உதை, சித்திரவதை அனுபவித்தேன்.

ஒருவழியாக எனது கணவர் மனமிரங்கி தாயைப் பார்த்து வர அனுப்பினார். சானாவில் உள்ள எங்கள் வீட்டுக்கு வந்ததும் ஓய்வு விடுதியில் உள்ள ஒரு பாழடைந்த வாகனத்துக்குள் தஞ்சமடைந்தேன். பிறகு யேமன் மனித உரிமை வழக்கறிஞர் நாசர் உதவியுடன் விவாகரத்து பெற்றேன். இப்படி தொடர்கிறது சிறுமி நுஜாத் அலியின் புத்தகம். ஊர் திரும்பிய நுஜாத், மீண்டும் படிக்கவிரும்பி பள்ளிசெல்ல நுஜாத்தை பள்ளியில் இருந்து நிர்வாகம் நீக்கிவிட்டதுதான் உச்சக்கட்ட சோகம். அதற்கு சொல்லப்பட்ட காரணம்... சர்வதேச ஊடகங்களுக்கு பேட்டி கொடுப்பதில் பிசியாக இருப்பதால் நீக்குகிறோம் என்பது.

---

**மனித...**

(முன்பக்கத் தொடர்ச்சி)

திருமதி பிரதீபா தேவிசிங் பட்டீலின் பெயரைப் பதிவு செய்து புகைப்படம் மற்றும் விரலடையாளங்களையும் எடுத்துக்கொண்டனர். இரண்டாவதாக உப ஜனாதிபதி ஹமீட் அன்சாரியின் பெயரை குடிசன மதிப்பீட்டு அதிகாரிகள் பதிவு செய்துகொண்டனர். ஜனாதிபதியின் பெயர் பதிவு செய்யப்பட்டபோது மத்திய உள்துறை அமைச்சர் பி. சிதம்பரமும் உடனிருந்தார்.

முதற்தடவையாக தயாரிக்கப்படும் தேசிய குடிசன இடாப்பில் தங்கள் விபரங்கள் தவறாமல் பதிவு செய்யப்படுவதை உறுதி செய்வதற்கு சகல பிரஜைகளும் முன்வரவேண்டுமென்று ஜனாதிபதி பிரதீபா பட்டீல் நாட்டு மக்களுக்கு வேண்டுகோள்விடுத்தார்.

இத்தகையதொரு பணி உலகின் வேறு எங்குமே மேற்கொள்ளப்பட்டதில்லை என்று குறிப்பிட்ட உள்துறை அமைச்சர் சிதம்பரம் இந்தியாவில் உள்ள ஒவ்வொரு கிராமத்திலும் ஒவ்வொரு வீட்டிலும் இந்தப்பணிகள் முன்னெடுக்கப்படும் என்று கூறினார்.

1872ஆம் ஆண்டுக்குப் பிறகு இந்தியாவில் மேற்கொள்ளப்படும் இந்த 15 ஆவது தேசிய சனத்தொகைக் கணிப்பீட்டுப் பணிகளில் 25 இலட்சம் அதிகாரிகள் ஈடுபடுத்தப்படுவர். இந்தியப் பிரஜைகளின் சமூக, பொருளாதார மற்றும் கலாசார விபரங்களைப் பதிவுசெய்யும் நடவடிக்கைகளுக்கு 2,209 கோடி ரூபா செலவாகும் என்றும் முழுமையாக தேசிய குடிசன இடாப்பை தயாரித்து முடிப்பதற்கு 3539 கோடி 24 இலட்சம் ரூபா செலவாகும் என்றும் மதிப்பிடப்பட்டிருக்கிறது. இந்தப்பணிகளுக்கு மொத்தம் 1 கோடி 10 இலட்சம் தொன் காகிதாதிகள் தேவைப்படும்.

இந்தியாவில் உள்ள மொத்தம் 640 மாவட்டங்கள்,5767 தாலுகாக்கள், 7,742 நகரங்கள் மற்றும் 6 இலட்சத்துக்கும் அதிகமான கிராமங்களை உள்ளடக்கிய குடிசன மதிப்பீடு 2011 மார்ச் 5 ஆம் திகதி முடிவுறும் என்று சந்திரமவுலி தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொள்ளைக்காக நடக்கும் கொலைகள்

யாழ். குடாநாட்டில் திருட்டு நடவடிக்கைகளுக்காக வயோதிபர்களை இலக்கு வைத்துத் தாக்கிக் கொலை செய்யும் கலாசாரம் அதிகரித்து வருகின்றது.

மக்களோடு மக்களாக மறைந்து வாழும் மர்ம நபர்கள் கனகச்சிதமாக இக்கொள்ளைகளை நடத்திவருகின்றனர்.

கடந்த 29 ஆம் திகதி வியாழக்கிழமை இரவு அளவெட்டி பலநோக்கு சங்கத்துக்குச் சமீபமாகவுள்ள வீடொன்றில் தனிமையில் வசித்து வந்த வயோதிப மாது குத்திக் கொலை செய்யப்பட்டிருக்கின்றார்.

பிரஸ்தாப வயோதிப மாதுவின் வீட்டுக்குச் சென்ற திருடர் கோஷ்டி ஒன்று அவரிடமிருந்த பணம்,நகைகள் மற்றும் பெறுமதிமிக்க பொருட்களை சூறையாடி எடுத்ததோடு மட்டுமல்லாது,கூரிய ஆயுதங்களால் தாக்கி அவரது உயிரையும் குடித்தது.



ஆயுதங்களைப் பயன்படுத்தி குறிப்பிட்ட வயோதிபமாதுவைக் குத்திக் கொலை செய்து விட்டே திருடர் குழு அங்கிருந்த பொருட்கள் முழுவதையும் மிக ஆறுதலாக,ஒன்றும் விடாது சூறையாடிச் சென்றிருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பான விசாரணைகளை தெல்லிப்பழை பொலிஸார் தீவிரமாக மேற்கொண்டு வருகின்றபோதும் திருடர்கள் இன்னமும் சிக்கியபாடில்லை என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேபோன்று,மற்றொரு சம்பவம் கடந்த 26 ஆம் திகதி திங்கட்கிழமை இரவு கோப்பாய் மத்திய பகுதியில் இடம்பெற்றுள்ளது. இச்சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த இராமச்சந்திரன் மீனாம்பாள்[வயது-61] என்ற வயோதிப மாது படுகோரமாக கொலை செய்யப்பட்டிருக்கின்றார்.

கோப்பாயில் தனிமையில் வசித்து வந்த இவரைக் கொலை செய்த திருடர்கள் இவரிடமிருந்து பெறுமதிமிக்க நகைகளையும் உருவி எடுத்துச்சென்றுள்ளனர்.சம்பவம் நடைபெற்ற தினத்துக்கு பின் குறித்த வீடு பூட்டியிருப்பதைக் கண்ட அயலவர்கள் பொலிஸாருக்கு தகவல் வழங்கியுள்ளனர்.இத்தகவலைத் தொடர்ந்து சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் சடலத்தை மீட்டு பிரேதபரிசோதனைகளுக்காக யாழ். வைத்தியசாலையில் ஒப்படைத்த போதும்,திருடர்கள் தொடர்பான துப்பெதனையும் பெறமுடியவில்லை என்று தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பான விசாரணைகளை கோப்பாய்ப் பொலிஸார் தொடர்ந்து மேற்கொண்டு வருகின்ற போதும் திருடர் தொடர்பான தகவல் எதனையும் பெற முடியவில்லை என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

யாழ்.குடாநாட்டில் சிவில் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டு,சட்டம்,ஒழுங்குகள் நிலைநாட்டப்பட்டு நீதித்துறை–பொலிஸ் துறைகள் புத்துணர்ச்சிபெற்று சிறப்பாக இயங்கி வரும் காலத்தில் இத்தகைய மர்மச் சம்பவங்களும் அரங்கேறிக் கொண்டுதான் இருக்கின்றன.

உள்நாட்டு யுத்தம் முடிவுக்கு கொண்டுவரப்பட்டு,ஒருகுடையின் கீழ் நாடு வந்திருப்பதாக மார்தட்டிப் பெருமிதம் கொள்ளும் அரசாங்கம் இத்தகைய நடவடிக்கைகளை தடுப்பதில் தீவிர கவனம் செலுத்தாதது ஏன் என்று மக்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

A-9 நெடுஞ்சாலை திறப்புக்கு பின் தென்பகுதியிலிருந்து சுற்றுலாப் பயணிகள் என்ற போர்வையில் யாழ். குடாநாட்டுக்கு வருகை தந்திருக்கும் மர்மநபர்கள் தினமும் செய்துவரும் அட்டகாசம் கொஞ்ச நஞ்சமல்ல என்று குடாநாட்டு மக்கள் புகாருடன் கவலையும் தெரிவிக்கின்றனர்.இவர்களை இனங்கண்டு கட்டுப்படுத்துவதற்கு பொலிஸ் மற்றும் நீதித்துறையினர் நடவடிக்கைகளை எடுப்பார்களா?என்றும் கேள்வி எழுப்புகின்றனர்.

நாங்களும் சொல்வது–கேட்பது அதைத்தான் கடந்த 30 வருடங்களுக்கு மேலாக அசாதாரண வாழ்வை அனுபவித்து வந்த குடாநாட்டு மக்கள் தற்போது உள்நாட்டு யுத்தம் முடிவுக்கு வந்து,ஓரளவு அமைதி வாழ்வை அனுபவித்து வரும் இவ்வேளை இத்தகைய திருட்டு சம்பவங்களும் கொலைச்சம்பவங்களும் இடம்பெறுவதென்பது ஏற்றுக்கொள்ள முடியாதது.இதை சட்டம் மற்றும் ஒழுங்கை நிலைநாட்டும் பொலிஸ்துறையினரும் நீதித்துறையினரும் இணைந்து தடுக்க முன்வரவேண்டும்.

**செ.சக்திதாசன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# காவுகொள்ளும் கண்ணிவெடிகள்

## சர்வதேச கண்ணிவெடி ஒழிப்பு தினம் நாளை

சர்வதேச ரீதியாக கண்ணிவெடி ஒழிப்பிற்கும் விழிப்புக்குமான தினம் நாளை ஞாயிற்றுக்கிழமை அனுஷ்டிக்கப்படவுள்ளது. உலகெங்கிலும் மோதல் நடைபெறுகின்ற பிரதேசங்களிலுள்ள மக்களை கண்ணிவெடிகள் மற்றும் மிதிவெடிகளிலிருந்து பாதுகாப்பதற்காகவும் இந்த வெடிபொருட்கள் தொடர்பாக மக்களுக்கு உரிய அறிவுறுத்தல்களை வழங்குவதற்காகவுமே இந்தத் தினம் ஏற்பாடு செய்யப்பட்டது.

யுத்தத்தில் ஈடுபடுகின்ற தரப்புகள் எதிரிகளிடமிருந்து தங்களைப் பாதுகாப்பதற்காகவும் எதிரிகளுக்கு இழப்புகளை ஏற்படுத்துவதற்காகவும் கண்ணிவெடிகள் மற்றும் மிதிவெடிகளைப் பயன்படுத்துகின்றனர். இந்த வெடிபொருட்கள் நிலத்தில் புதைத்து வைக்கப்படுகின்ற அதே வேளை முட்புதர்கள், பற்றைகள், மரங்கள், வீடுகள் போன்ற பல இடங்களிலும் மறைத்து வைக்கப்படுகின்றன.

யுத்தத்தில் ஈடுபடுகின்றவர்கள் இதனால் இழப்புகளைச் சந்திக்கின்ற அதேவேளை பல்லாயிரக்கணக்கான அப்பாவி பொதுமக்களும் இதனால் பெரும் பாதிப்புகளை எதிர் நோக்குகின்றனர். உடலின் அவயவங்கள் இழக்கப்படுவதோடு மரணங்களும் சம்பவிக்கின்றன.

எமது நாட்டில் கடந்த மூன்று தசாப்த காலமாக உள்நாட்டு யுத்தம் இடம்பெற்றது. இந்த யுத்தத்தில் ஈடுபட்ட அரச படையினரும் விடுதலைப் புலிகளும் கண்ணிவெடி மற்றும் மிதி வெடிகளைத் தாராளமாகவே பயன்படுத்தியுள்ளனர். இதனால், யுத்தத்தில் ஈடுபட்ட இரண்டு தரப்பினரையும் பொது மக்களையும் உள்ளடக்கி இலட்சக்கணக்கானோர் அங்க வீனமாக்கப்பட்டுள்ளனர். இந்த வகையான வெடிபொருட்களால் ஆயிரக்கணக்கானோர் கொல்லப்பட்டிருக்கிறார்கள்.

குறிப்பாக யுத்தம் தீவிரமாக நடைபெற்ற வடக்கு, கிழக்குப் பகுதிகளைச் சேர்ந்த பொதுமக்களே இதனால் பெரும் பாதிப்புகளை எதிர்நோக்கினார்கள். இறுதி யுத்தம் நடைபெற்ற கிளிநொச்சி, முல்லைத்தீவு போன்ற மாவட்டங்களில் மக்கள் முழுமையாக மீளக்குடியேற்றப்படாமைக்கு அங்குள்ள பெருமளவான நிலக் கண்ணிகள் அகற்றப்படாமையே காரணமென்று அரசாங்கம் கூறிவருகின்றது.

இந்த வெடிபொருட்களை அகற்றும் பணிகள் அங்கு தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருவதாகக் கூறுகின்ற அரசாங்கம் அவை பூரணமாக நிறைவடைந்த பின்னரே மக்களை மீளக்குடியமர்த்த முடியுமென்றும் கூறுகின்றது.

உலகளாவிய ரீதியில் இந்த நிலக் கண்ணிகளை பொதுமக்கள் அங்கவீனர்களாவதையும் உயிரிழப்பதையும் தடுக்கும் நோக்குடனேயே ஒட்டாவா கண்ணிவெடித் தடை உடன்படிக்கை எட்டப்பட்டது. கனடாவின் ஒட்டாவா நகரில் கூடிய சர்வதேச நாடுகளின் பிரதிநிதிகளாலேயே இந்த உடன்படிக்கை எட்டப்பட்டது.

மறைந்திருந்து மனிதர்களுக்கு ஆபத்தை விளைவிக்கக்கூடிய இந்த வெடிபொருட்களை இனிமேல் நாம் எச்சந்தர்ப்பத்திலும் பயன்படுத்த மாட்டோம் என்று தெரிவித்த சர்வதேச நாடுகள் பல அந்த உடன்படிக்கையில் ஒப்பமிட்டிருக்கின்றன. ஆனால் இலங்கை உட்பட ஆசியப் பிராந்தியத்தைச் சேர்ந்த 36 நாடுகள் இதுவரை அந்த உடன்படிக்கையில் கைச்சாத்திடவில்லை.

இலங்கையில் உள்நாட்டு யுத்தம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்ட பின்னர் கண்ணிவெடி மற்றும் மிதிவெடிகளை அகற்றும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சின் கீழ் 2002 ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட தேசிய கண்ணிவெடியகற்றல் நடவடிக்கைக் குழு இச் செயற்பாட்டில் அதிக அக்கறை காட்டி வருகின்றது. யுனிசெப் மற்றும் யு.என்.டி.பி. போன்ற அரச சார்பற்ற நிறுவனங்களும் இதற்குப் பெரும் பங்களிப்பைச் செலுத்தி வருகின்றன.

ஏப்ரல்–4 ஆம் திகதியாகிய நாளை அனுஷ்டிக்கப்படவுள்ள சர்வதேச கண்ணிவெடி ஒழிப்பு மற்றும் அது தொடர்பான விழிப்புணர்வு தினத்தையொட்டி கடந்த புதன்கிழமை கொழும்பிலுள்ள இலங்கை இதழியல் கல்லூரியில் ஊடகவியலாளர்களுக்கான கருத்தரங்கு ஒன்று நடத்தப்பட்டது. தேசிய கண்ணிவெடியகற்றும் நடவடிக்கைகள் குழு, யுனிசெப், யு.என்.டி.பி. மற்றும் இலங்கை இதழியல் கல்லூரி ஆகியன ஒருங்கிணைந்து இந்தக் கருத்தரங்கை ஏற்பாடு செய்திருந்தன.

தேசிய கண்ணிவெடியகற்றும் நடவடிக்கைக் குழுவின் பணிப்பாளர் மொண்டி ரணதுங்க இங்கு கருத்துத் தெரிவிக்கையில்;

இலங்கையில் கண்ணிவெடியகற்றும் செயற்பாடுகள் துரித கதியில் முன்னெடுக்கப்படுவதாகக் கூறினார். இறுதி யுத்தம் நடைபெற்ற முல்லைத்தீவு போன்ற பிரதேசங்களில் நாங்கள் தற்போது மதிப்பீடுகளை செய்து கொண்டிருப்பதாகவும் பெருமளவு பிரதேசம் காடுகளாக இருக்கின்றமையும் காலநிலை மாற்றங்களும் சூழல் தடைகளும் இதற்குப் பாதிப்புகளை ஏற்படுத்துவதாகவும் கூறினார். முன்னுரிமைப் பிரதேசங்கள் என்ற அடிப்படையில் பணியாற்றியதன் மூலம் கடந்த 10 வருடங்களில் தாங்கள் வெகு தூரம் முன்னேறியுள்ளதாகவும் இவ்வாறான வெடிபொருட்களால் சிவிலியன்கள் பாதிக்கப்படுவதானது 2020 ஆம் ஆண்டளவில் பூச்சியமாகிவிடுமென்றும் அவர் கூறினார்.

இலங்கை இராணுவத்தின் பிரதம வெளிக்களப் பொறியியலாளரும் இராணுவ ஊடகப் பேச்சாளருமான பிரிகேடியர் உதய நாணயக்கார இங்கு கருத்துக் கூறுகையில்;

யுத்தம் நீங்கியுள்ள தற்போதைய நிலையில் யுத்தப் பிரதேசங்களிலுள்ள கண்ணிவெடிகளை அகற்றுவதற்காகப் படையினரிடம் ஒப்படைக்கப்பட்ட பணிகளை அவர்கள் திறமையாகச் செய்து வருவதாகக் கூறினார். நீண்ட காலமாக படையினர் கடும் யுத்தம் புரிந்த முகமாலைப் பிரதேசத்தில் அங்குலம் அங்குலமாகத் தாங்கள் சோதனையிட வேண்டியுள்ளதாகவும் போதிய வளங்கள், மிதிவெடிகள் உள்ள இடங்களின் ஆவணங்கள் என்பன இல்லாத நிலையிலும் படையினர் தமது பலத்துடன் திறமையாகச் செயற்படுவதாகவும் கூறினார்.

யுனிசெப் நிறுவனம் 1998 ஆம் ஆண்டிலிருந்து யாழ்ப்பாணத்தில் கண்ணிவெடியகற்றும் செயற்பாட்டில் ஈடுபட்டு வருவதாகவும் 2002ஆம் ஆண்டு முதல் அது மேலும் விரிவுபடுத்தப்பட்டுள்ளதாகவும் இந்த நிறுவனத்தின் மிதிவெடிச் செயற்பாட்டு அதிகாரி செபஸ்தியான் கஸாக் கூறினார். இலங்கையில் 8 மாவட்டங்களிலுள்ள 350 இடங்களில் தங்களின் இந்தச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் தேசிய கல்வி நிறுவனத்துடன் இணைந்து 25 ஆயிரம் ஆசிரியர்களுக்கு தாங்கள் விழிப்புணர்வு பயிற்சிகளை வழங்கியுள்ளதாகவும் அவர் கூறினார்.

வெடிபொருட்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு அவயவங்களைப் பொருத்துவதுடன் நிறுத்தாமல் அவர்களுக்கு தொடர்ச்சியான உளவியல் சமூக மேம்பாட்டையும் ஏற்படுத்த வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்தினார்.

யாழ். குடாநாட்டில் இந்த வெடிபொருட்களால் அவ்வப்போது சில உயிர்கள் காவு கொள்ளப்படுகின்றன. அண்மையில் கொழும்புத்துறையில் இடம் பெற்ற சம்பவத்திலும் இரண்டு அப்பாவி மாணவர்கள் பலியாகியிருக்கிறார்கள்.பலியானவர்கள் போக அதில் அங்கவீனமாகியவர்களின் எதிர்காலம் கேள்விக்குறியாகியுள்ளது.

கைவிடப்பட்ட காவலரண்கள், உயர்பாதுகாப்பு வலயங்களாக இருந்த இடங்கள் உட்பட பல இடங்களிலும் மறைந்திருக்கும் இந்த வெடிபொருட்கள் தொடர்பாக பொது மக்கள் மிகுந்த அவதானத்துடன் செயற்படுவதன் மூலமே இந்தப் பாதிப்புகளிலிருந்து மீட்சிபெற முடியும்.


அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள் ஒன்றிணைந்து இது தொடர்பான தீவிர விழிப்புணர்வைத் தொடர்ச்சியாக முன்னெடுக்க வேண்டும்.இதன் மூலம் எமது மக்கள் ஊனமுறுவதையும் இழப்புகள் ஏற்படுவதையும் தவிர்த்துக்கொள்ள முடியும்.

என்.பிருந்தாபன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யோகாவின் மீது திரும்பியிருக்கும் கம்யூனிஸ்ட் பிரசண்டாவின் நாட்டம்



நேபாளத்தின் மாவோவாத கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவரும் முன்னாள் பிரதமருமான பிரசண்டா தற்போது யோகாவினால் கவரப்பட்டிருக்கிறார்.

கம்யூனிஸ்ட் சித்தாந்தத்தை தனது இலட்சியமாக வரித்துக் கொண்ட அவரின் புதிய போக்கு ஊடகங்களின் கவனத்தைப் பெரிதும் ஈர்த்திருப்பதைக் காணக்கூடியதாக இருக்கிறது. யோகா மீதான பிரசண்டாவின் நாட்டம் குறித்து நேபாளத்தினதும் இந்தியாவினதும் ஊடகங்கள் இவ்வாரம் முக்கியத்துவம் கொடுத்து செய்திகளை வெளியிட்டிருக்கின்றன.

ஒரு தசாப்தத்துக்கும் கூடுதலான காலமாக நேபாளத்தில் இடம்பெற்ற மாவோவாத கம்யூனிஸ்ட்களின் ஆயுதக் கிளர்ச்சிக்குத் தலைமைதாங்கி உலகின் ஒரேயொரு இந்து இராச்சியம் என்று வர்ணிக்கப்பட்ட அந்த நாட்டில் முடியாட்சியைத் தூக்கியெறிந்த அரசியல் மாற்றங்களுக்கு முன்னோடியாக விளங்கிய பிரசண்டா கடந்த சில மாதங்களாகத் தனது வாழ்க்கைப் பாணியை மாற்றிக் கொள்வதற்காகவும் கழுத்தில் உள்ள நோயைக் குணப்படுத்துவதற்காகவும் இந்தியாவின் பாரம்பரிய 'பிராணயாம' பயிற்சியில் தன்னை ஈடுபடுத்தியிருக்கிறார்.

'பிராணயாம' என்ற எளிதான யோகா பயிற்சி மூச்சை உள்வாங்கி வெளிவிடுவதன் மூலமாகச் செய்யப்படுவதாகும். நேர்மறையான சிந்தனைகளை ஊக்குவிப்பதற்கு யோகாசனப் பயிற்சி நல்லது என்ற நம்பிக்கையை கம்யூனிஸ்ட் பிரசண்டா அண்மைக் காலமாக வளர்த்து வந்திருக்கிறார்.



புதிய அரசியலமைப்பொன்றை வரைவதற்கு நேபாளம் தயாராகிக் கொண்டிருக்கும் தற்போதைய தருணத்தில் நேர்மறையான சிந்தனைகளை ஊக்குவிப்பதற்காக மாவோவாத கம்யூனிஸ்ட் கட்சியின் உறுப்பினர்களுக்கும் பிரசண்டா யோகா பற்றிய செய்திகளை அனுப்பிக் கொண்டிருக்கிறார்.

நேபாளத் தலைநகர் காத்மண்டுவில் மூன்று வருடங்களுக்கு முன்னர் இந்திய யோகா முகாமொன்று நடத்தப்படுவதற்கு மேற்கொள்ளப்பட்ட ஏற்பாடுகளை பிரசண்டா கடுமையாக எதிர்த்தார். ஆனால், இப்போது மூன்று வருடங்கள் கழித்து அவரே மனதை மாற்றிக் கொண்டு யோகா பயிற்சியில் இறங்கியிருக்கிறார்.

காத்மண்டுவில் ருண்டிகீல் என்ற பகுதியில் சுமார் 30 ஆயிரம் மக்கள் திரண்டிருந்த மைதானத்தின் நடுவில் கழுத்தில் உருத்திராட்சமாலை அணிந்த வண்ணம் பாயை விரித்து அமர்ந்திருந்து பிரசண்டா கடந்த திங்கட்கிழமை யோகா பயிற்சியில் ஈடுபட்டிருந்தார்.

மக்களின் நலன்களுக்காக யோகாவின் ஆன்மீக உணர்வும் மாவோவாத கோட்பாடுகளும் கலந்த செயற்பாடுகளை முன்னெடுக்க முடியும். அதனால் நற்பயன் விளையும் என்று நேபாள மக்கள் கூறுகிறார்களாம்.

இந்தியாவின் யோகா குருவான ராம்தேவ் அவர்களே பிரசண்டாவுக்கு யோகா மீதான நாட்டம் ஏற்படுவதற்குக் காரணமாயிருந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இதுபற்றி பிரசண்டா கூறுகிறார்;


'முதற்தடவையாக ராம்தேவை நான் புதுடில்லியில் சந்தித்தபோது இந்தியாவுக்கும் நேபாளத்துக்கும் இடையிலான பல நூற்றாண்டு காலப் பழைமை வாய்ந்த சமூக,கலாசாரப் பிணைப்புகளை மேலும் மேம்படுத்துவதற்காக யோகாவின் ஊடாக நேபாள மக்களை அணுகவிரும்புவதாக அவர் என்னிடம் தெரிவித்தார். எனக்கும் ராம்தேவ் அவர்களுக்கும் இடையேயான சம்பாஷணை மிகவும் சுவாரஸ்யமானதாக அமைந்திருந்தது. கழுத்தில் எனக்கு இருக்கும் நோய்க்காக ராம்தேவின் கிளினிக்கில் நான் உடற்பயிற்சி மூலமான சிகிச்சையொன்றையும் பெற்றுக்கொண்டேன். அந்தச் சிகிச்சையையடுத்து உடனடியாகவே எனது கழுத்து வலி நீங்கியது. யோகாவின் சக்தியை அதன் மூலமாக நான் உணர்ந்துகொண்டேன். இதையடுத்தே நல்ல வாழ்க்கை முறைக்காகவும் உடலாரோக்கியத்துக்காகவும் யோகாவைப் பின்பற்ற எனது கட்சியினர் ஆர்வம் காட்ட வேண்டுமென்று நான் விரும்பினேன்.

'நேபாளம் அதன் மக்களுக்காக நீதியான அரசியலமைப்பொன்றை வரைவதற்கான ஏற்பாடுகளில் இறங்கியிருக்கும் வேளையில், யோகா மூலமான ஒழுக்க நல வாழ்க்கை முறை எமது மக்களுக்கு பெருமளவுக்கு உதவ முடியுமென்று நான் நம்புகிறேன். இந்த வாழ்க்கை முறை இந்திய சமுதாயத்தினதும் கலாசாரத்தினதும் உள்ளார்ந்த பண்பாக அமைந்திருப்பதைக்காண முடிகிறது. யோகாவின் நேர்மறையான சக்தியினால் [நேபாளத்தை மேலும் கூடுதலான ஆற்றல் வாய்ந்த நாடாக மாற்றுவதற்கு] கம்யூனிஸ்ட் சித்தாந்தத்தை வளப்படுத்த முடியும்'.

. வெகு விரைவாகவே புதிய அரசியலமைப்பொன்று வரையப்படுவதை உறுதி செய்யும் முயற்சிகளைத் தனது கட்சி செய்து கொண்டிருப்பதாகவும் ஆளும் கூட்டணியின் உறுப்பினர்களுடனும் எதிரணிக்கட்சிகள் பலவற்றுடனும் பேச்சுவார்த்தைகளை நடத்திக் கொண்டிருப்பதாகவும் பிரசண்டா கூறியிருக்கிறார். ஜனநாயக செயன்முறைகள் உருப்படியான முறையில் முன்னெடுக்கப்பட வேண்டுமென்பதே தனது விருப்பம் என்று கூறிய பிரசண்டா,தான் பிரதமராகவிருந்த காலத்தில் இந்தியாவிலுள்ள மாவோவாத போராளிகளுக்கு உதவிகளைச் செய்து ஆதரவளித்ததாகக் கூறப்படுவதை திட்டவட்டமாக மறுத்தார்.

உலகின் பல்வேறு பகுதிகளிலும் உள்ள மாவோவாதி குழுக்களின் கோட்பாடுகள் வேறுபட்டவை என்று குறிப்பிட்ட அவர் இந்தியாவில் உள்ள மாவோவாதிகளுக்கு எந்த உதவியையும் செய்யவில்லை என்றார்.

2008 ஆகஸ்ட் 15 இல் நேபாளத்தின் பிரதமராகத் தெரிவு செய்யப்பட்ட பிரசண்டா [புஷ்பகமால் தஹால்] அந்த நாட்டின் இராணுவத் தளபதியை பதவி நீக்குவதற்கு மேற்கொள்ளப்பட்ட முயற்சியைத் தொடர்ந்து மூண்ட சர்ச்சைகளின் காரணமாக 2009 மே 4 ஆம் திகதி பதவியை இராஜிநாமா செய்தார் என்பது குறிப்பிடத்தக்கது.



குரு ராம் தேவ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரிட்டிஷ் சகாக்களைவிட கல்வியில் மேம்பட்டு நிற்கும் சீன, இந்திய மாணவர்கள்

பிரிட்டனில் உள்ள இந்திய மாணவர்கள் பாடசாலைகளில் தங்களது பிரிட்டிஷ் சகாக்களைவிடவும் கல்வியில் சிறந்து விளங்குவதாகவும் ஆங்கிலப் பாடத்தில் கூட திறமையான பெறுபேறுகளைக் காட்டுவதாகவும் முன்னணி செய்திப் பத்திரிகையின் டெய்லி மெயில் இவ்வாரம் செய்தி வெளியிட்டிருக்கிறது.

இரண்டாம் நிலை பரீட்சையில் சகல பாடங்களிலுமே பிரிட்டிஷ் சிறுவர்களைவிடவும் இந்திய மாணவர்களும் சீன மாணவர்களும் சிறந்த தரங்களில் சித்தியெய்துவதாக சிறுவர்கள், பாடசாலைகள் மற்றும் குடும்பங்களுக்கான திணைக்களத்திடமிருந்து பெறப்பட்ட புள்ளி விபரங்கள் மூலம் தெரியவந்திருக்கிறது.

பொதுத் தராதரக் கல்விப் பரீட்சையில் *(General certificate of School education Exams)* கடந்த வருடம் 31 சதவீதமான இந்திய மாணவர்களும் 55 சதவீதமான சீன மாணவர்களும் சகல பாடங்களிலும் A சித்திகளைப் பெற்றிருக்கிறார்கள்.பிரிட்டிஷ் மாணவர்கள் மத்தியில் 16 சதவீதமானவர்கள் மாத்திரமே அவ்வாறான A சித்திகளைப் பெற்றிருக்கிறார்கள். கறுப்பு ஆபிரிக்க மாணவர்களில் 14 சதவீதமானோரும் பாகிஸ்தான் மாணவர்களில் 13 சதவீதமானோரும் கறுப்பு கரிபியன் மாணவர்களில் 8 சதவீதமானோரும் சகல பாடங்களிலும் A சித்தியைப் பெற்றிருப்பதாக டெய்லி மெயில் தெரிவித்திருக்கிறது.



இந்திய மாணவர்களும் சீன மாணவர்களும் கணித பாடத்தில் மிகவும் திறமைசாலிகளாக முன்னணியில் நிற்பது மாத்திரமல்ல, ஆங்கிலப் பாடத்தில் கூட பிரிட்டிஷ் மாணவர்களை விடவும் சிறப்பாக சித்திபெறுகிறார்கள்.

சீன மாணவர்களில் 29 சதவீதமானவர்களும் இந்திய மாணவர்களில் 21 சதவீதமானவர்களும் ஆங்கிலப் பாடத்தில் A சித்தி பெற்ற அதேவேளை, பிரிட்டிஷ் வெள்ளை மாணவர்களில் 15 சதவீதத்தினர் மாத்திரமே ஆங்கிலத்தில் A சித்தி பெற்றிருப்பதைக் காணக்கூடியதாக உள்ளது.

கறுப்பு ஆபிரிக்க மாணவர்களில் 11 சதவீதத்தினரும் பாகிஸ்தான் மாணவர்களில் 9 சதவீதத்தினரும் ஆங்கிலத்தில் A சித்தி பெற்றிருக்கிறார்கள்.

புவியியல், சரித்திரம், இரசாயனவியல், உயிரியல், பௌதீகம், பிரெஞ்சு மொழி மற்றும் சமய பாடங்களில் சீன, இந்திய மாணவர்கள் சிறப்பான பெறுபேறுகளைக் காட்டுகிறார்கள் என்றும் புள்ளி விபரங்கள் மூலம் அறிய முடிகிறது.

கல்வியைப் பொறுத்தவரை இன ரீதியான சிறுபான்மையினர்களுக்கும் வெள்ளையர் சமூகத்திற்கும் இடையே காணப்படுகின்ற மனோபாவமே வேறுபட்ட தரத்தினாலான செயற்பாடுகளுக்கு காரணமாக இருப்பதாக பிரிஸ்ரல் பல்கலைக்கழகத்தின் ஆராய்ச்சியாளர்கள தெரிவிக்கிறார்கள்.

குடியேற்றவாசிகள் சமூகங்களின் மத்தியில் உயர்ந்த அபிலாஷைகள் காணப்படுகின்றன. வாழ்க்கையில் முன்னேற வேண்டுமென்ற துடிப்பு முழு அளவில் அவர்கள் மத்தியில் காணப்படுகிறது.

சமூக முன்னேற்றத்துடன் கல்வித் தகைமைகளை இணைத்துப் பார்க்கிறார்கள் அவர்கள் என்று கலாநிதி டிபோறா வில்சன் என்ற ஆராய்ச்சியாளர் கூறுகிறார்.

# ஹிலாரியின் மகளுக்கு யார் தந்தை?



முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி பில் கிளின்டனின் மகள் செல்ஸீ கல்லூரியில் படித்த காலத்தில் வாட்டசாட்டமான அழகான இளைஞர் ஒருவனைக் காதலித்தார். அந்த இளைஞனின் பெயர் ஜோன்.

கல்லூரியில் இருந்து தந்தையாருடன் வெள்ளை மாளிகைக்கு தொலைபேசியில் தொடர்புகொண்டு செல்ஸீ தனது காதல் விவகாரம் குறித்துத் தெரிவித்தார். ஜோனைப் பற்றிய விபரங்களையும் தந்தையிடம் மகள் கூறினார்.

ஜோனைப் பற்றிய விபரங்களை அறிந்ததும் கிளின்டன் மகளிடம் 'நீ அந்த இளைஞனைத் திருமணம் செய்ய முடியாது' என்று திட்டவட்டமாகக் கூறிவிட்டார்.

மகள் 'ஏன்' என்று கேட்டதற்கு 'ஜோனின் தாயாருடன் பல வருடங்களுக்கு முன்னர் எனக்கு தொடர்பு இருந்தது. ஜோன் உண்மையில் எனது சட்டபூர்வமற்ற பிள்ளையே, அதனால் உனக்கு அவன் சகோதரன்' என்று தந்தை பதிலளித்தார்.

தந்தை கூறியவற்றை அலசி ஆராய்ந்த செல்ஸீ ஜோனுடனான காதலைக் கைவிடத் தீர்மானித்தார்.

பின்னர் சில மாதங்கள் கழித்து அதே கல்லூரியில் படித்த இன்னொரு மாணவனை செல்ஸீ காதலிக்கத் தொடங்கினாள். அவனின் பெயர் ஜேம்ஸ்.

ஜேம்ஸைப் பற்றிய விபரங்களை கிளின்டனிடம் மகள் கூறியதும் அவனைத் திருமணம் செய்வதற்கும் அவர் மறுப்பே தெரிவித்தார்.

'ஏன் என்று கேட்டதற்கு ஜேம்ஸின் தாயாருடனும் எனக்கு பல வருடங்களுக்கு முன்னர் தொடர்பு இருந்தது. எனக்குப் பிறந்தவன்தான் ஜேம்ஸ். அதனால், உனக்கு அவன் சகோதரன்' என்று கிளின்டன் பதிலளித்தார்.

இரு காதல் விவகாரங்களுமே சரிவராமல் போனதால் செல்ஸீ பெரும் கவலைக்குள்ளானார்.

சில மாதங்கள் கழித்து அடம் என்ற மாணவனுடன் நெருங்கிப் பழக ஆரம்பித்தார் செல்ஸீ. தன்னைத் திருமணம் செய்ய விருப்பமா என்று அடம் செல்ஸீயைக் கேட்டபோது தந்தையிடம் கேட்டு முடிவைச் சொல்வதாக அவள் கூறினாள்.

கிளின்டனுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்ட செல்ஸீ 'அடம் உங்களுக்கு உறவுக்காரரா' என்று விசாரித்தார்.

'ஆமாம் அவனும் கூட உனக்குச் சகோதரன் உறவு முறைதான். அதனால், அவனையும் நீ திருமணம் செய்ய முடியாது' என்ற பதிலே ஜனாதிபதியிடமிருந்து வந்தது.

பெரும் எரிச்சலடைந்த செல்ஸீ தாயார் ஹிலாரியுடன் தொடர்புகொண்டு தனது பிரச்சினையைச் சொன்னார்.

'நான் காதலிக்கிற சகலருமே அப்பாவின் சட்டவிரோத மகன்களாக இருக்கிறார்களே அம்மா. நான் என்னதான் செய்வது' என்று தாயாரிடம் மகள் கேட்டாள். அடமைப் பற்றிய விபரங்களையும் தாயாருக்கு செல்ஸீ தெரியப்படுத்தினார்.

'நீ கவலைப்படத் தேவையில்லை. அடமையே திருமணம் செய்யலாம்' என்று தாயார் மகளுக்கு ஆறுதல் கூறினார்.

ஏன் அப்படிக் கூறுகிறீர்கள் என்று தாயாரிடம் மகள் கேட்டபோது 'கிளின்டன் உண்மையில் உனது தந்தையில்லை' என்று பதில் வந்தது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

CM K

# காய்கறிகளுக்கு மாறும் அமெரிக்கர்கள்



அமெரிக்காவில் பிறந்த குழந்தை முதல் பெரியவர்கள் வரை நாக்கில் சப்புகொட்டிச் சாப்பிடும் 'பர்கர்' வகைதான் 'ஹொட் டொக்ஸ்' என்பது. இரத்த அழுத்தம், சீனி அளவு அதிகரிக்கவும் உடல் எடை அதிகரிப்பதற்கும் இந்த சிக்கன், மட்டன் பர்கர் தான் காரணம் என்று டாக்டர்கள் எச்சரிக்கை செய்த பின் இப்போது குழந்தைகளை இதன் பிடியில் இருந்து மீட்க பெற்றோர் போராடி வருகின்றனர்.



குழந்தைகளை பள்ளிக்கு அனுப்பும் போது மதிய வேளையில் சாப்பிடும் உணவுகளில் அதிக கொழுப்பு உறைந்த கொழுப்புகள் உணவு வகைகள் டிபன்பொக்ஸில் அதிகம் இடம்பிடிக்கின்றன. போதாக்குறைக்கு ஹொட்டொக்ஸ் பர்கரையும் குட்டீஸ்கள் விரும்பிச் சாப்பிடுவதால் பள்ளிப் பருவத்திலேயே உடல் எடை அதிகரிப்புக்கும் ஆளாகி விடும் ஆபத்து ஏற்படுகிறது. அதனால், புரோட்டீன், நார்ச்சத்துள்ள உணவுகளுக்கு மாற வேண்டும் என்று நிபுணர்கள் வலியுறுத்தி வந்தனர். இதன் விளைவு இப்போது அமெரிக்கர்கள் பலரும் நம்மைப் போல காய்கறி, பழங்களுக்கு மாறி வருகின்றனர். கேக், ஐஸ்கிறீம், பீட்சா, குளிர்பானங்களை குறைத்து வருகின்றனர்.

குழந்தைகளுக்கான சத்துணவுகளை பட்டியலிட்டுள்ளது அமெரிக்க சுகாதார நலத்துறை. அதில் உள்ளவை;

* அரிசி, கோதுமை உட்பட தானிய வகை உணவு தினமும் முக்கியம்.
* சுகாதாரமான நொறுக்குத் தீனி பொப் கோர்ன்.
* கரட், வெள்ளரி, தக்காளி, வெங்காயம் கொண்டு தயாரிக்கப்பட்ட வெஜ் சாலட்.
* குழந்தைகளாக இருந்தால் பிசைந்த உருளைக்கிழங்கு உணவு.
* திராட்சை, பாதாம் உட்பட உலர்ந்த பழங்கள்.
* பழங்கள் அல்லது பழச்சாறுகள்.
* மீன், முட்டை, பால்.
* புரோட்டீன் தரும் சோயா பீன்ஸ்.
* வேர்க் கடலை போன்ற கடலை வகைகள்.

பசளைக் கீரை உட்பட கீரை வகைகள்.

அமெரிக்காவில் உள்ள சராசரி மக்கள், தங்கள் வாழ்க்கை முறையை பல வகையில் மாற்றி வருகின்றனர். முந்தைய ஜனாதிபதி கிளின்டன் இந்தியா வந்த போது இந்திய திருமண குடும்ப கலாசாரத்தைப் பார்த்து வியந்தார். அதுபோல 'நான் ஒரு மகளைப் பெற்ற தந்தையாக கவலைப்படுகிறேன். அவளை நல்லபடியாக திருமணம் செய்துவைக்க ஆசைப்படுகிறேன்' என்று சமீபத்திய அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி புஷ் இந்தியா வந்தபோது கூறினார்.


இப்படி ஜனாதிபதி மட்டுமல்ல, சாதாரண அமெரிக்கர்களும் இந்தியாவைப் பார்த்துதான் தங்களை மாற்றி வருகின்றனர். குறிப்பாக சத்துணவுகள் என்றால் இந்தியாவின் உணவுப்பழக்கம் தான் என்பதை அமெரிக்க, ஐரோப்பிய மக்கள் உணர்ந்து வருகின்றனர். அமெரிக்காவில் பல ஆண்டாக கொடிகட்டிப் பறந்த ஹொட்டொக்ஸ் என்ற பர்கர் உணவு வகை, இப்போது குட்டீஸ்களின் உணவுப் பெட்டியில் இடம்பெறுவதில்லை. அதற்குப் பதிலாக பழங்கள் தான் இடம்பெறுகின்றன.

# இந்திய நறுமண பொருட்களில் உலோக நஞ்சு

இந்திய நறுமணப் பொருட்கள் செந்தூரம் உட்பட பூஜைப்பொருட்களில் உலோக நச்சு உள்ளதாக அமெரிக்காவில் நடந்த ஆய்வில் தெரியவந்துள்ளது. எனினும் உலோக நச்சு அளவு அதிகமாக உள்ளதா என்று துல்லியமாக உறுதி செய்யமுடியாது என்று அமெரிக்க அரசு கைவிரித்துள்ளது.

இந்தியாவில் தயாராகும் நறுமணப் பொருட்கள் அமெரிக்காவில் கணிசமான அளவுக்கு விற்பனை ஆகிறது. இந்திய உணவு வகைகளுக்கு மட்டுமன்றி பல்வேறு நாடுகளின் உணவு வகைகளிலும் இந்திய நறுமணப்பொருட்கள் பயன்படுத்தப்படுகின்றன.

பொஸ்டன் பகுதியைச் சேர்ந்த சில இந்திய குழந்தைகள் உலோக நச்சுப்பொருள் காரணமாக உடல் நிலை பாதிக்கப்பட்டனர். அவர்களை பரிசோதித்த நிபுணர்கள் இந்திய நறுமணப்பொருட்கள் கலந்த உணவுகளை இவர்கள் சாப்பிட்டு வந்துள்ளது ஒரு காரணமாக இருக்கலாம். நறுமணப்பொருட்களில் ஈயம் உலோக நச்சு கலந்துள்ளது என்று கூறினர். இதைத்தொடர்ந்து பொஸ்டன் குழந்தைகள் மருத்துவமனை ஆராய்ச்சி மையம், ஹாவாட் பொது சுகாதார ஆய்வுமையம் இணைந்து ஆய்வுசெய்தது. இந்திய நறுமணப்பொருட்கள் ஏலக்காய், மிளகு, லவங்கம், மிளகாய் வற்றல் போன்றவற்றில் கிராமுக்கு ஒரு மைக்ரோ கிராம் அளவு நச்சுப்பொருளான ஈயம் கலந்துள்ளது. 25 சதவீத இந்தியப்பொருட்கள் இந்த வித நச்சுத் தன்மையுடன் விற்பனை செய்யப்படு



கின்றன என்று ஆய்வு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

எனினும் அமெரிக்க அரசின் பொது சுகாதார அமைப்பு இந்த விடயத்தில் உஷாராக அறிக்கை வெளியிட்டுள்ளது. அனுமதிக்கப்பட்ட அளவை விட குறைவாகவே இந்திய நறுமணப்பொருட்களில் ஈயம் உலோக நச்சு உள்ளது. இருந்தாலும் தொடர்ந்து குழந்தைகள் சாப்பிட்டு வருவதால் உலோக நச்சு அவர்கள் இரத்தத்தில் கணிசமாகக் கலந்துள்ளது. அதனால், உஷாராக இருக்க வேண்டும். என்பதே எங்கள் நோக்கம் என்று கூறியுள்ளது. நறுமணப்பொருட்கள் செந்தூரம் போன்ற பூஜைப் பொருட்களில் உள்ள ஈயம் கலவை மிகவும் குறைவுதான். ஐரோப்பிய பொருட்களில் ஒரு கிராமுக்கு ஐந்து மைக்ரோகிராம் வரை கலந்துள்ளது. இந்திய பொருட்கள் அதிகமாக விற்பனை ஆவதால் வர்த்தக நோக்குடன் தவறான தகவல்களை ஆய்வு மூலம் வெளிப்படுத்தியிருக்கலாம் என்று வெளிநாட்டு இந்திய வர்த்தகர்கள் வேதனை தெரிவித்தனர்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில் முதற் தடவையாக தன்னினச் சேர்க்கையாளரின் திருமணம்

பிரிட்டிஷ் பாராளுமன்றம் அமைந்திருக்கும் லண்டன் வெஸ்ட்மின்ஸ்டர் மாளிகையில் முதற்தடவையாக தன்னினச் சேர்க்கையாளர்களின் திருமண வைபவமொன்று கடந்த வாரம்( மார்ச் 27 )நடைபெற்றிருக்கிறது.

இத்தகைய எந்தவொரு நிகழ்வுமே பிரிட்டிஷ் பாராளுமன்றக் கட்டடத் தொகுதியில் இதுவரை நடந்ததில்லை.

ஐரோப்பா அமைச்சரான கிறிஸ்ட் பிறையன்றுக்கும் (ஆண்) அவரது சுவட்டாளி ஜரேட் கிறானிக்கும் இடையே நடைபெற்ற திருமணத்தில் பாராளுமன்றத்தின் செனட் பிரதிநிதிகள் சபையான கொமன்ஸ் சபையின் சபாநாயகர் கோன் பெர்கோவும் கலந்து கொண்டார். கிறானி கம்பனியொன்றின் செயலாளராக தொழில் பார்க்கின்றார்.

இதுகாலவரை தன்னினச் சேர்க்கையாளர்களான எம்.பிக்கள் தங்கள் திருமணங்களை பாராளுமன்றக் கட்டடத் தொகுதிக்குள் நடத்துவதற்கு அனுமதிக்கப்பட்டதில்லை. ஆனால், அந்தப் பாரம்பரியத்தை தகர்த்தெறிவதற்காக வெஸ்ற்மின்ஸ்டர் சிற்றி கவுன்ஸிலின் விசேட அனுமதியை சபாநாயகர் இத்தடவை பெற்றிருந்தார்.பொது மக்கள் மத்தியில் இருக்கக் கூடிய தன்னினச்சேர்க்கையாளர்களும் இதே போன்ற வைபவங்களை பாராளுமன்றக் கட்டடத் தொகுதிக்குள் நடத்துவதற்கு இதன் மூலம் வழிதிறந்து விடப்படிருக்கின்றது.

தங்கள் வாழ்வில் இத்தகையதொரு தினம் வருமென்று ஒருபோதுமே கனவு கூடக் கண்டதில்லை என்று புது மணத் தம்பதியர் தெரிவித்தனர்.

மிகவும் குறுகியதொரு காலகட்டத்திற்குள் நிலைவரங்கள் பெருமளவுக்கு மாற்றங்கண்டிருப்பது பெரும் ஆச்சரியத்தைத் தருகிறது.ஒரு சில வருடங்களுக்கு முன்னர் தன்னினச் சேர்க்கையாளர்கள் அவர்களின் பாலியல் நடத்தைகள் காரணமாக இராணுவத்தில் சேர்க்கப் படவில்லை. அவர்களை வேலைகளில் இருந்து நீக்க முடியும்.அவர்கள் திருமணம் செய்து கொள்ளவும் அனுமதிக்கப் படவில்லை.அவர்களுக்கு எந்தவித அனுசரணையும் வழங்கப்படவும் மாட்டாது. ஆனால்,இப்போது பாராளுமன்றம் நிலைமைகளை மாற்றியிருப்பது விசேடமான ஒரு விவகாரமாகும்.

எம்.பிக்களுக்கு மாத்திரமே இருந்த சிறப்புரிமையை ஐக்கிய இராச்சியத்தில் உள்ள சகலருமே அனுபவிக்கக் கூடியதாக இருப்பது எமக்கு பெரும் மகிழ்ச்சியைத் தருகின்றது என்று புது மணத்தம்பதியினர் அறிக்கையொன்றில் தெரிவித்திருக்கிறார்கள்.



## அது ஒரு நாய்க்குட்டி



வருடத்தின் மூன்றாவது தவணை இறுதியில் ஒரு பாலர் பாடசாலையில் சிறுவர்கள் தங்களது ஆசிரியைக்கு பரிசுப் பொருட்களைக் கொண்டுவந்தார்கள்.

மலர்ச்சாலை உரிமையாளரின் மகன் கொண்டுவந்த பரிசுப் பொதியை குலுக்கிப் பார்த்த ஆசிரியை 'நீங்கள் எனக்கு மலர்களைக் கொண்டு வந்திருக்கிறீர்கள்' என்று கூறிச் சந்தோசப்பட்டார்.

அடுத்ததாக ஐஸ்பழக் கடைக்காரரின் மகன் கொண்டு வந்த பொதியை தூக்கி குலுக்கிப் பார்த்த ஆசிரியை 'எனக்கு நிச்சயமாகத் தெரியும் நீங்கள் ஐஸ்கிரீம் பெட்டியொன்றையே கொண்டு வந்திருக்கிறீர்கள்' என்று கூறினார்.

அதற்கு அந்தப் பையனும் ஆம் என்று சொன்னான்.

மூன்றாவதாக மதுபான விற்பனை நிலையத்தின் உரிமையாளரின் மகனின் பொதியை தூக்கி குலுக்கிப் பார்த்தார் ஆசிரியை.

அப்போது அந்தப் பொதிக்குள் இருந்த திரவம் ஒன்று கசிந்தது. அதை தனது விரலால் தொட்டு நாக்கில் வைத்து ருசித்துப் பார்த்த ஆசிரியை 'இது வைன் போத்தல் தானே' என்று கேட்டார்.

இல்லையென்று பதில் சிறுவனிடமிருந்து வந்தது.

மீண்டும் ஒரு தடவை அந்தக் கசியும் துளிகளைத் தொட்டுப் பார்த்து நாக்கில் வைத்த ஆசிரியை 'இது வைன் இல்லையென்றால் ஒரு சம்பெயின் போத்தலாகத்தான் இருக்க வேண்டும்' என்று சொன்னார்.

சிறுவனிடமிருந்து மீண்டும் இல்லையென்றே பதில் வந்தது,

அதற்குப் பிறகு ஆசிரியை பொதிக்குள் இருப்பது என்னவென்பதை ஊகித்துப் பார்ப்பதை மேலும் தொடர விரும்பாமல் சிறுவனிடமே 'சரி அப்படியென்றால் இந்தப் பொதிக்குள் என்னதான் இருக்கிறது. நீங்களே கூறுங்கள்' என்று கேட்டார்.

சிறுவனிடமிருந்து பதில் வந்தது; அது ஒரு நாய்க்குட்டி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# குடாநாட்டில் சிங்கள வியாபாரிகளின் புதுவித மோசடி

தென் பகுதியிலிருந்து குடாநாட்டுக்குச் சென்று வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடும் சிங்களவர்கள் புதுவித மோசடிகளில் ஈடுபடுவதுடன், யாழ். குடாநாட்டு மக்களின் தரமான உற்பத்திப் பொருட்களின் பெயருக்கு களங்கத்தை ஏற்படுத்தி வருவது அங்கு சென்று வரும் நல்மனம் படைத்த சிங்கள அன்பர்கள் மூலம் தெரியவந்துள்ளது.

யுத்தம் முடிவடைந்துள்ள இன்றைய நிலையில், ஏ-9 வீதியூடாக தெற்கு உள்ளிட்ட ஏனைய பிரதேச மக்கள் வடக்கில் புதிய உறவுகளைப் பெற்றுக்கொள்ளச் செல்கின்றனர்.

இன்று இலங்கையில் யாழ்ப்பாணம் போகாத குடும்பமோ, சமூகமோ இல்லை எனலாம். அனைவரும் ஆசையோடு செல்கின்றனர். இவ்வாறு பயணிப்போர் குடாநாட்டின் சந்தைகளைப் பார்க்கும் போது இது இரத்தினபுரியா? என்பது போல அங்கு இரத்தினபுரி சிங்களவர்களின் பனங்கருப்பட்டித் தொழில் விருத்தியடைந்துள்ளது.

மேலும், யாழ்ப்பாணத்தின் யாழ்ப்பாணக் கடைவீதி, நல்லூரர் வீதி உள்ளிட்ட பல வீதிகளில் சிங்கள சமூகத்தினரின் கடைகள் அதிகரித்துள்ளன. இங்கு வியாபாரம் செய்யும் சிங்களவர்களை விசாரித்தால் ஏதோ வவுனியா, மதவாச்சிப் பகுதியைச் சேர்ந்தவர்கள் போல் கதைப்பர். ஆனால், அவர்கள் இரத்தினபுரி என்பது அவர்களின் செயல்கள் மூலம் புலப்படுகின்றன.

இரத்தினபுரி பகுதிகளிலிருந்து கருப்பட்டியைக் கொண்டு வந்து யாழ்ப்பாணப் பனங்கட்டி என்று ஏமாற்றுகின்றனர். யாழ். மக்களின் பாரம்பரியத் தொழில்களில் ஒன்றாகக் காணப்பட்ட பனங்கருப்பட்டி உற்பத்தித் தொழிலையும் ஏனைய பிரதேசத்தவர்கள் விலை கொடுத்து வாங்கிவிட்டனர்.

மதவாச்சியை பிறப்பிடமாகக் கொண்டவர் எனக் கூறிய இரத்தினபுரியைச் சேர்ந்த காமினி பிரேமரத்ன என்பவர் நாகதீபம், பலாலி உள்ளிட்ட குடாநாட்டின் கிராமப் பகுதிகளிலும் கூட யாழ்ப்பாணப் பனங்கருப்பட்டி என்று பொய் கூறிக் கொண்டு இரத்தினபுரி கருப்பட்டியை விற்பனை செய்கின்றார்.

குடாநாட்டின் பல பகுதிகளில் இடங்களை வாடகைக்குப் பெற்று அங்கு தனியாக இரத்தினபுரியிலிருந்து கொண்டு வரப்பட்ட பொருட்கள் விற்பனை செய்யப்படுகிறது. இதனால் குடாநாட்டு மக்கள் தமது தொழில் துறையில் பெரும் சிரமங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

குடாநாட்டில் சிங்களவர்களின் சந்தைப்படுத்தல் அதிகரித்துள்ளதாகக் கூறிய நல்லூரர் கோவில் பாதுகாப்புத் தொடர்பில் பணிபுரியும் பொலிஸார் விற்பனை செய்பவர்களின் நிலை பற்றிக் கூறினார். அவர் தொடர்ந்து கூறுகையில்;

யாழ்ப்பாணத்தில் பாரம்பரியமாக பனங்கருப்பட்டி உற்பத்தி செய்யும் தமிழ் உற்பத்தியாளர்கள் ஒருநாளும் தங்களது தொழிலில் மோசடி செய்வதில்லை. ஆனால், இங்கு தற்போது சிங்கள தொழிலாளர்களின் பெருக்கம் அதிகரித்துள்ளது.

இங்கு விற்கப்படும் பனங்கருப்பட்டியை கொழும்பு புறக்கோட்டையில் செய்து, இரத்தினபுரியில் பொதி செய்து குடாநாட்டில் விற்கப்படுகிறது. இதனால் இங்கு வரும் உல்லாசப் பயணிகள் யாழ்ப்பாணத்தின் உற்பத்திப் பொருள் என எண்ணி அனைத்தையும் வாங்கிச் செல்கின்றனர். வீட்டுக்குச் சென்று பார்த்த பிறகு பழுதடைந்த,ஒழுங்கற்ற பொருட்களை விற்பனை செய்வதாக யாழ். மக்களைத் திட்டுகின்றனர். இதற்கு ஒழுங்கான முறைகளை அரசு கையாள வேண்டுமென அவர் மேலும் கூறினார்.

ஏ-9 வீதி திறக்கப்பட்ட பின்பு, தெற்கு உள்ளிட்ட ஏனைய பிரதேச மக்கள் குடாநாட்டிற்குச் செல்லும் பெருக்கம் அதிகரித்தமையால் இவர்களின் அனைத்து வசதிகளும் அழிந்து செல்கிறது. இரத்தினபுரி தொழிலாளர்களின் பனங்கருப்பட்டி உள்ளிட்ட ஏனைய பொருட்கள் இங்கு விற்பனை செய்யப்படுகிறது. இதற்கு துணைபோபவர்கள் யார் என்று நோக்குவோமாயின் குடாநாட்டிலுள்ள பண மோகம் பிடித்த தலைவர்களே என்று கூறமுடியும்.

தமது பொருளாதாரத்தை பெருக்கிக் கொள்ள தத்தமது வீட்டையும், தோட்டங்களையும் வாடகைக்குக் கொடுப்பதனால் இங்குள்ள வியாபாரிகளுக்கு ஒழுங்கான முறையில் வியாபாரம் செய்ய முடியாதுள்ளதுடன், அவர்களது தொழில் துறையில் போட்டித் தன்மை ஏற்பட்டுள்ளது.

குடாநாட்டில் பனங்கருப்பட்டி விற்பனை செய்யும் எம்.கே.திணேஷ் என்பவர் கூறுகையில்;

'நாம் இங்கு வந்து இரு வாரமாகிறது. ஒரு சிலர் வந்து 2-3 மாதங்களாகிறது. இங்கு எமது தொழில் செய்பவர்கள் 30-40 பேர் வரை உள்ளனர். யாழ். நகரசபையின் அனுமதி பெற்று நாம் இங்கு தொழில் செய்கின்றோம். நகர சபைக்கு ஒரு நாளைக்கு 200 ரூபா வீதம் பணம் கொடுக்கின்றோம். இருப்பினும் நான் இங்கு தொழில் மேற்கொள்ளும் போது இங்குள்ள சிறுதொழில் மேற்கொள்ளும் தமிழ் வியாபாரிகள் எவ்வித எதிர்பார்ப்புகளையும் தெரிவிக்கவில்லை' என்றார்.

இத் தொழில் மேற்கொள்ளும் இரத்தினபுரியைச் சேர்ந்த இன்னொருவர் கூறுகையில்,

'நான் இங்கு வீடொன்றை வாடகைக்கு எடுத்து 3 வாரங்கள் ஆகின்றன. எனக்கு 4 பிள்ளைகள் உண்டு. எனது பிள்ளைகளை மனைவி பார்ப்பார். நான் இஞ்சி பிஸ்கட், பனங்கருப்பட்டி போன்றவற்றை விற்பனை செய்கிறேன். நாளொன்றுக்கு 2000 ரூபா வருமானம் கிடைக்கும்.

சில நாட்களில் 600 ரூபா மட்டுமே இலாபமாகக் கிடைக்கும். வீட்டு வாடகையாக மாதத்திற்கு 3000 ரூபா செலுத்துகிறோம். இவ்வேளையில், எனக்கு எவ்வித நஷ்டமும் இல்லை' எனக் கூறினார்.

தமிழ் மக்களின் வேடங்கள் அணிந்து சிங்களவர்கள் இங்கு பல்வேறு வியாபார உபாயங்களைக் கையாண்டு தங்களது வியாபாரத்துறையை மேம்படுத்திக் கொள்வதை அரசியல் பிரமுகர்கள் கண்டு கொண்டும் இது தொடர்பில் எவ்வித நடவடிக்கையும் எடுக்காமலிருப்பது கவலைக்குரிய விடயமே!

இன்னொரு இடத்தில் தமிழ் பெண்களைப் போல் நெற்றியில் திலகமிட்டவாறு ஒரு பெண்மணி காணப்பட்டார். ஆனால், அவர் தமிழ்ப் பெண்ணல்ல, சிங்களப் பெண். தென் பகுதியிலிருந்து வருவோரை ஏமாற்றி தென்பகுதிப் பொருட்களையே அவர்களுக்கு யாழ். குடாநாட்டு உற்பத்திப் பொருள் எனக் கூறி விற்பதற்கே அவர் தமிழ்ப் பெண் போல நெற்றியில் திலகமிட்டுக் கொண்டும் கொச்சைத் தமிழில் பேசிக் கொண்டும் தனது விற்பனையை மேற்கொள்கின்றார்.



**எச்.ஹுஸ்னா**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒளி அதிர்ச்சி



1666 ஆம் ஆண்டு ஐசக் நியூட்டன் ஓர் ஒளி ஆராய்ச்சியை மேற்கொண்டார். அவர் சூரிய ஒளிக்கற்றையை ஒரு முக்கோண கண்ணாடிப் படிகம் வழியாகப் பாய்ச்சினார். அப்போது ஊதா,ஊதா நீலம், நீலம் ,பச்சை, மஞ்சள், ஆரஞ்சு, சிவப்பு என்று வண்ணங்கள் பிரிந்தன.அதை 'நிறமாலை என்று நியூட்டன் கூறினார்.

1800 ஆம் ஆண்டளவில் ஆங்கில வானியல் ஆய்வாளரான வில்லியம் ஹெர்ஷல் 'நிறமாலை'யின் சிவப்பு முனை அருகே ஒரு தெர்மா மீற்றரை பிடித்தார். அப்போது தெர்மாமீற்றரின் பாதரச அளவு உயர்ந்தது. சூரியனிலிருந்து பார்வைக்குப் புலப்படும் வெளிச்சத்துடன் கண்ணுக்குப் புலப்படாத கதிர்களும் வெளிப்படுகின்றன என்பதை அது உணர்த்தியது.

ஹெர்சல் கண்டுபிடித்த் அந்தக் கதிர் 'அகச்சிவப்புக்கதிர்' எனப்பட்டது.

இதே காலகட்டத்தில் ஜேர்மனிய விஞ்ஞானியான ஜோகன் வில்கம் ரிட்டர் 'நிறமாலை'யின் மறுமுனையில் ஆய்வு மேற்கொண்டார். அவர் நீலம் அல்லது ஊதா வண்ணத்தில் 'சில்வர் நைட்ரைட் 'காட்டப்படும்போது அது 'மெட்டாலிக் சில்வர்' ஆக உடைகிறது என்று ஜோகன் கண்டுபிடித்தார். 'நிறமாலை'யின் ஊதாமுனை அருகே அது வைக்கப்பட்டபோது இன்னும் வேகமாக உடைந்தது.

ஜோகன் கண்டுபிடித்த கண்ணுக்குத் தெரியாத கதிர் ' புற ஊதாக்கதிர்' எனப்பட்டது.




## தெரிந்துகொள்ளுங்கள்!

- புவியீர்ப்பு விசையைப் பற்றி ஐசக் நியூட்டனுக்கு முன்பே முதன்முதலில் கூறிய இந்திய அறிஞர் வராகமிகிரர்.
- மேரிக் கியூரி அம்மையார் தனது 32 ஆவது வயதில் ரேடியத்தைக் கண்டுபிடித்தார்.
- வௌவால்கள் ஓசை மூலமாகவே இடத்தைக் கண்டுபிடிக்கின்றன என்பதை முதன்முதலில் கண்டுபிடித்துக் கூறியவர் லாசரோ ஸ்பலான் சாலி என்பவர். இவர் இத்தாலி நாட்டைச் சேர்ந்தவர்.
- பெஞ்சமின் ஃபிராங்க்ளின் முதல் அரசியல் கார்ட்டூனிஸ்டாகக் கருதப்படுகிறார்.
- உலகில் முதலில் கரும்பு பயிரிட்ட நாடு இந்தியா.
- இந்தியாவிலேயே அதிகளவு உப்பு எடுக்கப்படும் மாநிலம் குஜராத்.
- தமிழ் சுருக்கெழுத்தைக் கண்டுபிடித்தவர் சீனிவாசராவ்.
- விழித்தெழ வைக்கும் ராகம் பூபாளம்.
- சோகத்தை தரும் ராகம் முகாரி.
- மகுடியில் ஊதும் ராகம் புன்னாகவராளி.
- உலகின் மிகப் பெரிய வைரம் குல்லினன். இது லண்டனில் உள்ளது.
- உலகின் மிகப் பெரிய கடிகாரம் லண்டனில் உள்ள பிக் பென்.
- உலகின் மிகப் பெரிய கண்டம் ஆசியா கண்டம். இது 4,44,93,000 சதுர கி.மீற்றர் பரப்பளவு கொண்டது.
- உலகின் மிகப் பெரிய ஏரி காஸ்பியன் கடல். இது 3,71,000 சதுர கி.மீற்றர் பரப்பளவு கொண்டது.
- உயர்ந்த மலைச் சிகரம் எவரெஸ்ட். இது 8,848 மீற்றர் உயரம் கொண்டது.

## குறுக்கெழுத்துப்போட்டி - 27

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | ★ | 5 |
| 6 | ★ | 7 | 8 | ★ | 9 |
| ★ | 10 | 11 | ★ | 12 | 13 |
| 14 | 15 | 16 | ★ | 17 | ★ |
| 18 | ★ | 19 | ★ | 20 | 21 |
| 22 | 23 | ★ | 24 | 25 | 26 |

**இடமிருந்து வலம்**

1. இலங்கையின் அயல் நாடு

7. கெடுதல்

10. சூரியனை இவ்வாறும் அழைப்பர் (திரும்பியுள்ளது)

12. உறவு முறையொன்று

14. உடம்பு என்றும் சொல்லலாம் (குழம்பியுள்ளது)

20. பொருட்களுக்கு அறிவிடப்படுவது

22. மருத்துவர் இது பிடித்துப் பார்ப்பார்

24. திருமணமாகாத பெண் (திரும்பியுள்ளது).

**மேலிருந்து கீழ்**

1. மின்னலுக்கும் இதற்கும் தொடர்புண்டு

3. திரைகடல் ஓடி இது தேடு என்பார்கள் (குழம்பியுள்ளது)

4. கரி என்றும் சொல்வார்கள்

5. அமெரிக்க ஜனாதிபதி

10. துறவிகள் அணிவது (தலைகீழ்)

12. பிரபல நடிகர்

14. வெட்கம் என்றும் சொல்லலாம் (தலைகீழ்)

21. இதில் புகையிரதம் ஓடிய காலமும் உண்டு (தலைகீழ்)

### குறுக்கெழுத்துப்போட்டி - 25 விடைகள்

| இடமிருந்து வலம் | மேலிருந்து கீழ் |
|---|---|
| 1. நாசா | 1. நாமம் |
| 3. தேகம் | 2. சாது |
| 6. மதுரை | 4. கரம் |
| 11. சாபம் | 8. சாரை |
| 17. வலி | 12. பரதன் |
| 22. அன்னம் | 14. சிவி |
| | 16. வானம் |
| | 17. வலை |

**250 ரூபா பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி**
**கே.இராஜகோபால்**
அடைக்கலம் தோட்டம்
கந்தசுவாமி கோவிலடி,வட்டுக்கோட்டை.

### பாராட்டுப்பெறுவோர்

01. தமிழ்வேந்தன் தஸ்மியன்,
ஊரெழு மேற்கு, சுன்னாகம்.

02. வி.செல்வநாயகம்,
சிவன் கோவில் வீதி, புத்தூர்.

03. தி.சேந்தன்,
உரும்பிராய் மேற்கு
உரும்பிராய்.

04. சிவபாலன் உஷொருதன்,
அரசடி லேன், நவாலி தெற்கு,
மானிப்பாய்.

05. வி.விஜயந்தி,
இல. 31/2, அத்தியடி புது வீதி,
யாழ்ப்பாணம்.

உங்கள் விடைகளை
'Saturday மெயில்'
இல. 336, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்
என்னும் முகவரிக்கு அனுப்புங்கள்...

## விடுகதைக்கு விடை தேடுங்கள்

1] உடலெல்லாம் பல் உள்ளவன். ஒருநாளும் கடிக்கமாட்டான் அவன் யார்?

2] கேட்காமல் ஊசி போடுவான்.காசு வாங்காமல் ஓடிப்போவான் அவன் யார்?

3] உயரமான தோட்டத்தில் ஒளிந்திருப்பான் கறுப்பான் அவன் யார்?

4] கைக்கெட்டும் தூரத்தில் இருக்கும் நம்மால் பார்க்க முடியாது அது என்ன?

5] தொடாமலே சிணுங்குவான்.தொட்டால் அடங்குவான் அவன் யார்?

6] நாம் தூங்கி எழுவதற்கு முன்னே வந்துவீடுவான் அவன் யார்?

7] எல்லோரையும் அழவைப்பவன் அவன் யார்?

8] பெட்டியில் போட்டு வைத்தாலும் எப்படியோ வெளியூர் போய்ச் சேர்ந்திடுவான் அவன் யார்?

9] அடுத்தவர் கட்டிய வீட்டில் இவன் வந்து குடியிருப்பான் அவன் யார்?

10] திருமண வீடொன்றில் வாசலில் வந்து நிற்பார்கள் அவர்கள் யார்?

11.தொட்டுத் தொட்டுப் போவான், கைகள் இல்லாதவன் அவன் யார்?

1.சீப்பு
2.கொசு
3.பேன்
4.முதுகு
5.போன்
6.பத்திரிகை
7.வெங்காயம்
8.கடிதம்
9. பாம்பு
10.வாழை மரங்கள்
11.கடலலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காதல் உறுதி

## டி.எஸ். தியாகராசன்

இன்றைய நாளில் ஆடவரும் பெண்டிரும் தத்தம் இளம் பருவத்தில் காதல் புரிந்து திருமணம் செய்துகொள்வது அதிகமாகி வருவதை நாம் காண்கிறோம். நவீன யுகத்தில் ஜாதி, மதம்,நாடு,மொழி,தகுதி என்ற பாகுபாடுகள் நெகிழ்ந்து வருவதாலும் ஊடகங்களில், பத்திரிகைகளில் ,கதைகளில், கவிதைகளில் வரும் செய்திகளின் வலிமையாலும் காதல் திருமணம் விகிதம் உயர்வது இயல்பாகி வருகிறது. ஆனால், எதனாலோ மனம் ஈர்க்கப்பட்டு மனம் ஒன்றிப் பழகியவர்கள் சட்டபூர்வ திருமணம் வரை சென்று பெற்றோர்களுக்கு தெரியாமல் தனித்து வாழ்ந்த சில காலத்திலேயே இருவரும் மனம் அமைதியிழந்து மணமுறிவுக்குத் தயாராகி வருகின்ற விகிதமும் உயர்ந்து வருகிறது.

தமிழர் வாழ்வில் பன்னெடுங்காலமாக காதல்,வீரம்,ஈகை என்ற இம்மூன்றும் பின்னிப் பிணைந்து வரும் இயற்கையான குணநலங்கள்.

அன்றைய நாளில் தலைவனும் தலைவியும் காதலிக்கத்தான் செய்தார்கள். களவு மணமும் கற்பு மணமும் வழக்கத்தில் இருந்தன. எனினும் ஒன்றிய உள்ளங்கள் விரைவில் ஒடிவதில்லை.முறிவதும் இல்லை.

சங்ககால காதல் காட்சி ஒன்றில் காதலின் மனஉறுதி ,காதலன்பால் கொண்டிருக்கும் நம்பிக்கை இவற்றைக் காதலி வாயிலாகப் புலனழுக்கற்ற அந்தணாளன் கபிலன் நமக்கு ஒரு குறும்படமாகவே படைத்திருக்கிறார்.

களவு மணம்புரிந்த தலைவன் ஒருவன் பொருள்தேடி வர எண்ணி தலைவிக்குத் தக்கவாறு உறுதிமொழி பகன்று புலம்பெயர்கிறான். அவன் குறித்த காலம் கடந்தது. தலைவன் தந்த உறுதிமொழி வண்ணம் வந்தானில்லை. தலைவியின் தோழி கலக்கமுற்றாள். ஏனெனில் அத்தோழிதானே களவு மணம் நிகழ உடனிருந்து உதவியவள்.

தலைவியைச் சினந்து அவள் அவனால் ஏமாற்றப்பட்டதை எண்ணி வருந்திக் கூறலானாள். ‘உனது மனம் கவர்ந்த அந்தக் கள்வன் உன்னிடத்தில் அன்புடையவன் இல்லை. அறநெறியில் பற்றுறுதி உடையவனும் இல்லை. ஏனோ அவனிடத்தில் உள்ளம் செலுத்தினாய். உன் அவலத்தை பேதமையை எண்ணி வருந்துகிறேன்’ என்கிறாள்.

தலைவிக்கு வந்ததே கோபம். தோழியை வெகுண்டாள். தலைவனின் உறுதி பற்றியும் அவனின் நல்லியல்புகள் குறித்தும் விரித்துரைக்கத் தொடங்கினாள்.

என் நலம் பற்றும் தோழியே குளிர்ச்சியான வெண்மையான திங்களில், ‘சிவந்த தீயை’ எப்போதாவது யாரேனும் கண்டனரோ? இல்லையே! அப்படித் திங்களில் ‘செந்தீ’ உண்டாகுமாயின் என் தலைவனிடத்தும் உள்ள உண்மையில் பொய் இருக்கும். அவரையே பற்றுக் கோடாக எண்ணும் எவர்க்கும் அளிக்கும் அவனது உறுதிமொழி பொய்மையாகுமோ?எம் தலைவனே இவண் வருவான்.

குளிர் நிழல் தரும் மரங்கள் சூழ்ந்த இடத்தில் உள்ள ஒரு நீர் நிலையில் அதன் மேற்பரப்பில் குவளை மலர் ஒன்று பூத்திருக்கிறது.இவ்வழகிய மலர் வெப்பத்தின் தன்மையால் குவளை வெந்து வாடும்.கருகிவிடும் என எண்ணுபவன் யார்?

ஒருக்கால் அம்மலர் கருகிடுமேயானால் எம் தலைவன் வராது ஒழிவான் என்பதும் உண்மை. ஞாலத்தைதன் ஒளிக்கற்றைகளால் உயிரூட்டும் கதிரவனிடத்து கருமை இருள் தோன்றுமோ? இங்ஙனம் ஞாயிற்றின் ஊடே இருள் தோன்றி ஒளி குன்றுமாயின் அன்புத் தலைவனும் எனை மறந்தான். எனவே, இனி நம் தலைவனை இழித்தோ, பழித்தோ கூறுவதை துறப்பாயாக என்றாள் தலைவி.

களவு மணம் கொண்ட தலைவனின் மனத்திட்பத்தையும் வினைத்திட்பத்தையும் வெகுநுட்பமாக இயற்கையோடு இயைந்து வாதிடும் அன்றைய நாள் தலைவி எங்கே?

## இலக்கிய சுவை...

கண்டதும் காதல், கொண்டதும் திருமணம், காலையில் பிணக்கு,மாலையில் மணவிலக்கு என்றிடும் இற்றைநாள் செய்தி எங்கே?

காதல் செய்வீர் என்றான் மகாகவி பாரதி. ஒவ்வொரு காதலனும் காதலியும் முதலில் சங்க இலக்கியம் படிக்க வேண்டும். கண்ணீரில் கரையும் காதலாய் இல்லாமல் மனம் வெதும்பும் மணமாய் நில்லாமல் காலம் காலமாய் கற்பு நெறியோடும் களிப்போடும் வாழ்வாங்கு வாழுங்கள். குறிஞ்சிப் புலவனின் அந்த இனிய குறும்படத்தை கலித்தொகைப் பாடல்களால் காண்போம்.

**‘பொய்த்தற்கு உரியனோ? பொய்த்தற்கு உரியனோ?**
**‘அஞ்சல் ஓம்பு’ என்றாரைப் பொய்த்தற்கு உரியனோ?**
**குன்றகல் நன்னாடன் வாய்மையின் பொய்தோன்றின்**
**திங்களுள் தீத் தோன்றியற்று’**

**(கலி.பா.வரி:21-24)**

**‘வாரா தமைவனோ?வாரா தமைவனோ?**
**வாரா தமைகுவான் அல்லன் மலைநாடன்,**
**ஈரத்துள் இன்னவைதோன்றின்,நிழல் கயத்து**
**நீருள் குவளை வெந்தற்று’**

**(கலி.பா.வரி:28-31)**

**‘துறக்குவன் அல்லன் துறக்குவன் அல்லன்**
**தொடர் வரை வெற்பன் துறக்குவன் அல்லன்**
**தொடர்புள் இனையவை தோன்றின்,விசும்பில்**
**சுடருள் இருள் தோன்றியற்று’**

**(கலி.பா. வரி:36-39)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Saturday சினிமா

# எந்திரன் படப்பிடிப்பு முடிந்தது

இரண்டு வருடங்களாக நீடித்த எந்திரன் படப்பிடிப்பு முழுமையடைந்தது. படத்தின் இறுதிக்கட்ட வேலைகள் நடப்பதாக இயக்குநர் ஷங்கர் அறிவித்துள்ளார். இந்தியாவிலேயே அதிக பொருட்செலவில் உருவாகும் படம் ரஜினி நடிக்கும் எந்திரன். இந்தப் படம் தெலுங்கு மற்றும் இந்தியிலும் ஒரே நேரத்தில் வெளியாகிறது. சுஜாதாவின் புகழ்பெற்ற நாவலான என் இனிய இயந்திரா மற்றும் அதன் தொடர்ச்சியான மீண்டும் ஜீனோ நாவல்களின் அடிப்படையில் உருவாகி வரும் விஞ்ஞானப் படம். ரஜினிக்கு ஜோடியாக ஐஸ்வர்யா ராயும் வில்லனாக டேனியும் நடித்துள்ளனர். கருணாஸ், சந்தானம் நகைச்சுவைக் கூட்டணி அமைத்துள்ளனர். பெரு, அமெரிக்கா, இந்தியாவின் பல பகுதிகளில் படமாக்கப்பட்டுவந்த எந்திரனின் இறுதிக்கட்டப் படப்பிடிப்பு சென்னையில் நிறைவுற்றது. இப்போது படத்தின் எடிட்டிங் உள்ளிட்ட இறுதிக்கட்டப் பணிகளில் தீவிரமடைந்துள்ளது எந்திரன் குழு. இது குறித்து இயக்குநர் ஷங்கர் தனது பிளாக்கில் இப்படிக் குறிப்பிட்டுள்ளார்; எந்திரன் படத்தின் இறுதிக் கட்டப் படப்பிடிப்பு வெற்றிகரமாக முடிந்தது. இப்போது எந்திரனின் எடிட்டிங் வேலைகளையும் ஆரம்பித்துவிட்டேன். இந்த இறுதிக் கட்டப் படப்பிடிப்பின் போது இரு இனிமையான விடயங்கள் நடந்தன. ஒன்று ஏ.ஆர்.ரஹ்மான் எந்திரனுக்காகப் போட்டுக் கொடுத்துள்ள இறுதிப்பாட்டு. இப்போது அதன் ரெக்கோர்டிங் பணிகள் நடந்துகொண்டுள்ளன. அடுத்து ரெட்டசுழி ஆடியோவை ஐஸ்வர்யா ராய் வெளியிட்டது. விரைவில் எந்திரன் ஓடியோ ரிலீஸ் பற்றிய அறிவிப்பு வரும் எனத் தெரிகிறது.

# வித்தியாசமான இயக்குநர்

தமிழ்ப் பட இயக்குநர்களில் வித்தியாசமானவர் சஞ்சய் ராம். ஒரு படம் படப்பிடிப்பில் இருக்கும் போது நான்கு படங்களுக்கு பூஜை போட்டிருப்பார். அந்த வகையில் இவரை பூஜையின் நாயகன் என்றும் சொல்லலாம். தற்போது இரு படங்களை ஒரே நேரத்தில் இயக்கி வருகிறார் சஞ்சய் ராம். கௌரவர்கள், சுர்லா என்ற அந்தப் படங்கள் முடிவுறும் நிலையில் உள்ளன.

இந்நிலையில் ரஞ்சித் நடிப்பில் புதியதொரு படத்தை அறிவித்துள்ளார். படத்தின் பெயர் விலாடபுரம். இந்தப் படத்தில் ரஞ்சித் ஜோடியாக நடிப்பவர் கீர்த்தி சௌலா. கௌரவர்கள், சுர்லாவுக்கு முன்பு இரு படங்களை சஞ்சய் ராம் தொடங்கினார். சிவமயம், பூவா தலையா என்ற அந்தப் படங்களின் கதி என்ன என்பது தெரியவில்லை. இந்நிலையில்தான் விலாடபுரம் படத்தின் அறிவிப்பை வெளியிட்டிருக்கிறார்.



சுறா-விஜய்



# அசினின் புதிய காதலர்

அமீர்கான், சல்மான் கான் கிசுகிசுக்கள் முடிந்து இப்போது புதிய காதல் கிசுகிசுவில் மாட்டியுள்ளார் அசின். கஜினி மூலம் இந்தியில் பரபரப்பானதுமே அமீர்கானுடன் இணைத்துப் பேசப்பட்டார் நடிகை அசின். ஆனால், அதை இருவரும் மறுத்தனர். பின்னர் லண்டன் ட்ரீம்ஸ் படத்தில் சல்மான் கான் ஜோடியானார். படப்பிடிப்பில் இருவரும் நெருக்கமாகப் பழகுவதாக கிசுகிசுக்கப்பட்டது. ...காதல் பரிசாக சல்மான் ...கான் மும்பையில் ...ங்களா ஒன்றை அசினுக்கு வாங்கிக் கொடுத்ததாகவும் செய்திகள் பரவின. குறுகிய நாட்களிலேயே சூப்பர் ஸ்டார்களுடன் ஜோடி போட்டு அவர்களை காதல் வலையிலும் வீழ்த்தியதாகவும் எப்போதும் ஊடகங்களின் பரபரப்பு பக்கத்தில் அசின் பெயர் இடம்பெறுவதாகவும் மும்பை நடிகைகளே பொறாமைப்படும் அளவு படுவேகமான வளர்ச்சியைச் சந்தித்தார் அசின். ஆனால், லண்டன் ட்ரீம்ஸ் படம் தோல்வி அடைந்ததால் இந்தியில் புதிய வாய்ப்புகள் இல்லாமல் போய்விட்டது அவருக்கு. இந்த நிலையில், அசினைப் பற்றி இன்னொரு காதல் கிசுகிசு பரவிவருகிறது. சூப்பர் ஸ்டார் நடிகர்களை விட்டு விட்டு, இந்தி நடிகர் நீல் நிதின் முகேசை அசின் காதலிப்பதாகக் கூறப்படுகிறது. இருவரும் அடிக்கடி ஹோட்டல்களில் ஜோடியாகக் காணப்படுவதாகவும் பின்னிரவு நேரம் வரை விருந்துகளில் இருப்பதாகவும் கூறப்படுகிறது. ஏற்கனவே தீபிகா படுகோனேவுடன் நீல் நிதின் முகேசை இணைத்துப் பேசினர். இப்போது தீபிகாவை உதறிவிட்டு அசின் பக்கம் தாவி உள்ளாராம் நீல். ஆனால், இருவருக்கும் நெருக்கமான நண்பர்கள் இதை வெறும் நட்பு என்கிறார்கள்.

# கலக்கும் சத்யராஜ்



இந்த வருடம் அதிக படங்களில் நடித்த நட்சத்திர நடிகர் என்ற பெருமை அநேகமாக சத்யராஜுக்கே கிடைக்கும். அந்தளவுக்கு மனிதர் படங்களில் பிஸி. சத்யராஜின் நாயகன் கட்டம் முடிவுக்கு வந்து வெகு நாளாகிறது. இதனை லேட்டாகப் புரிந்து கொண்டவர் எந்த வேடம் என்றாலும் நடிக்கத் தயார் என அறிவிக்க படங்கள் குவிந்தன. தெலுங்கில் இவர் வில்லனாக நடித்த படம் சினம் என்ற பெயரில் தமிழில் வெளியாகிறது. இதையடுத்து ஏப்ரலில் சுந்தர் சி யுடன் நடித்த குரு சிஷ்யன் திரைக்கு வருகிறது. தங்கர்பச்சானின் களவாடிய பொழுதுகளில் பெரியாராக மீண்டும் நடித்துள்ளார் சத்யராஜ். இதைத் தவிர சஞ்சய் ராமின் கௌரவர்கள், ஷோசிமின் இயக்கத்தில் ஆயிரம் விளக்கு, கரனுடன் இரண்டு முகம், பிரசாந்தின் பொன்னர் சங்கர், பிரகாஷ்ராஜுடன் தலசேகரனும் கூலிப்படையும்... சத்யராஜின் படங்களின் பட்டியல் நீண்டுகொண்டே செல்கிறது. இந்தப் படங்கள் எதிலும் சத்யராஜ் நாயகன் அல்ல என்பது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவேக் ஒபராயின் தாராள மனசு



விவேக் ஒபராய் நடித்த பிரின்ஸ் என்ற படத்தை தமிழ், தெலுங்கு இரு மொழிகளிலும் மொழிமாற்றம் செய்து வெளியிடப் போகிறார்கள். இதை யொட்டி சென்னைக்கு வந்திருந்தார் ஒபராய். மாலை ஐந்தரைக்கு பத்திரிகை யாளர்களை வரவழைத்திருந்தார்கள். ஆனால், கோவையிலிருந்து சென்னை வரவேண்டிய விவேக், விமானத்தைத் தவறவிட்டு விட்டாராம். சென்னை விமான நிலையத்திற்கு வந்து சேரவே ஆறரை ஆனதால் சத்யம் தியேட்டரை வந்தடைய இரவு எட்டரையைத் தாண்டியது. அதுவரைக்கும் காத்திருந்த நிருபர்களுக்கு அவரது சிரிப்பு, ஏராள மான கலோரிகளை உள்ளடக்கிய சிரப். இந்தப் படத்தில் அவருக்கு 3 ஜோடி கள். ட்ரெய்லரில் ஒரு ஜோடிக்கு அவர் கொடுத்த லிப் கிஸ்ஸை விடாமல் பற்றிக் கொண்டார்கள் நிருபர்கள். இந்தக் கிஸ் ஸுக்கு பதினெட்டு டேக் ஆச்சாமே? என்று கலாய்க்க அதிர்ந்தே போனார் விவேக். டில்லி நிருபர்கள் பத்து முறை ரீ டேக் எடுத்தாங்களாமே என்றார்கள். நீங்க அதுக்குள்ளே எட்டு டேக்கை அதிகரிச்சுட்டீங்களா என்றவர், "முத்தக் காட்சிகள் எடுக்கும் போது எப்படி எடுப் பார்கள் என்பதைப் பற்றி ஒரு லெக்சரே கொடுக்க ஆரம்பித்தார். நம்மைச் சுற்றி அத்தனை பேர் நிற்கும் போது வேறு மூட் எப்படி வரும் என்பது அவரது நெத்தியடியான கேள்வி. வந்த இடத்தி லும் வாழ்த்துகளை வாங்கிக் கொண்டு போகும்படியாக ஒரு விடயத்தைச் சொன்னார். 1200 பெண் குழந்தைக ளைத் தத்தெடுத்து படிக்க வைக்கிறாராம். அவர்களுக்கு தேவையான உணவு, உடை எல்லாவற்றையும் இவருக்குச் சொந்தமான சமூக சேவை அமைப்பே கவனித்துக் கொள்கிற தாம்.


## விக்ரமின் தவிப்பு

ஒரு நாயகன் வருடக்கணக்கில் பார்த்துப் பார்த்து உருவாக்கிய வீட்டுக்கு குடிபோவதை ஒரு திருவிழா வாகக் கொண்டாடுவது தானே சரி. ஆனால், அமை தியாக காதும் காதும் வைத்தாற் போல சென்றுள்ளார் விக்ரம். ஒரு கொண்டாட்டம் இல்லை, கோலாகலம் இல்லை. ஆனால், மனசெல்லாம் மயிலிறகால் வருடி விட்ட மாதிரி இருக்கிறதாம் அவருக்கு இந்த வீட்டி லிருக்கும் போதெல்லாம் வேறென்ன உழைப்பில் உருவானதாச்சே. ஒரு குறிப்பிட்ட இடத்தை அடைந்துவிட்ட பல நாயகர்களுக்குள் இருக்கிற ஆசைதான் அவருக்குள்ளும். ஏற்கனவே தேசிய விருதுகள் வாங்கியிருந்தாலும் ராவணா படத்தின் மூலம் அதையும் கைப்பற்றி விடுவது என்பதில் வெறியாகவே இருக்கிறாராம் விக்ரம். தமிழில் நாயகன், இந்தியில் வில்லன். ஒரே நேரத் தில் இரண்டு காட்சிகளையும் அடுத்த டுத்து படம்பிடிப்பாராம் மணிரத்னம். ஆனால், இரண்டு காட்சிகளிலும் ஒரே விக்ரம். வேறு வேறு ஸ்டைலில் அசத்துவது கண்டு யூனிட்டே வாய் பிளந்து நிற்குமாம். இவ்வளவு சந்தோஷங்கள் இருந்தாலும் ஒரு வருத்தம் விடாமல் விரட்டிக் கொண்டிருக்கிறது சீயானை. வருடத்திற்கு மூன்று படங்கள் என்பது அவரது இலக்கு. ஆனால், அது சரி யாக நடக்கவில்லையே என் பதுதான் அவரது தவிப்பு.



## என்கௌண்டர் ஸ்பெஷலிஸ்டாக கார்த்திக்

ராவண், மாஞ்சாவேலு, புலி வேஷம்... இவையெல்லாம் கார்த்திக் நடிக்கும் படங் கள். வீடு தேடி வாய்ப்பு வந்தபோது விலகிப் போன கார்த்திக்கிடம் இப்போது அப்படியே தலைகீழ் மாற்றம். ஒன்பது மணிக்குப் படப் பிடிப்பு என்றால் எட்டு மணிக்கே மேக்கப் புடன் ஆஜராகிவிடுகிறார். இதனை நம்ப முடியாமல் கார்த்திக்கை கட் டிப் பிடித்து ஆனந்தத்தில் கண்ணீர் விட்டிருக்கிறார் பி.வாசு. இவர்தான் புலிவேஷம் படத்தின் இயக்குநர். அப்பாவி ஒருவன் கிராமத்திலிருந்து சென்னை வருவதுதான் புலிவேஷம் படத்தின் கதை. சென்னை மாநகரமும் அவனுக்கு இழைக்கப்பட்ட துரோக மும் அப்பாவியை ரவுடியாக்குகிறது. இந்தக் கதாபாத்திரத்தில் ஆர்.கே. நடிக் கிறார். அவருக்கு சதா ஜோடி. கார்த்திக் பொலிஸ் அதிகாரி. வெறும் அதிகாரி அல்ல, என்கௌண்டர் ஸ்பெஷலிஸ்ட். ராவண், மாஞ்சாவேலு, புலிவேஷம் ஆகிய படங்கள் தன்னை மீண்டும் கோடம்பாக்கத்தில் பிஸியாக்கும் என்று நம்புகிறார் கார்த்திக். படப்பிடிப்புக்கு இலஞ்சம் கொடுக்காமல் இருந்தால் நவரச நாயகனுக்கு சிவப்புக் கம்பளம் விரிக்கத் தயா ராகவே இருக்கிறது தமிழ் சினிமா.



## கும்பகோணம் செல்லும் விஜய்-அசின்

ஒருபடம் முடியும்போது அடுத்தபடம் தொடங்கியிருக் கும். இது விஜய் பொலிஸி. இதற்கிடையில் பத்திரிகையாளர் கள் யாரையும் அழைக்காமல் சுறா படத்தின் ஆடியோவை வெளி யிட்டது சன் பிக்சர்ஸ். (பத்திரிகை யாளர்கள் வந்தால் படம் எடுப்பார்கள், பத்திரிகையில் பிரசுரமாகும். பிறகு சன் தொலைக்காட்சியில் ஓடியோ வெளி யீட்டு விழாவை ஒளிபரப்பும் போது ரசிகர்களுக்கு அது பழசாகிவிடும்.) இந்த மாதம் சுறா வெளியாகிறது. அதற்கு முன் தனது அடுத்தபடத்தைத் தொடங்கத் திட்டமிட்டுள்ளார் விஜய். விஜயின் 51 ஆவது படத்தை சித்திக் இயக்குகிறார். மலையாளத்தில் இவர் இயக்கிய பொடி கார்ட் படம்தான் சில மாறுதல்களுடன் விஜய்க்காகத் தயாராகியிருக்கிறது. இதில் விஜய் ஜோடியாக அசின் நடிக்கிறார். எதிர்வரும் 7 ஆம் திகதி கும்பகோணத் தில் படப்பிடிப்பைத் தொடங்க விஜய் திட்டமிட்டிருப்பதாக நம்பத்தகுந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. பெய ரிடப்படாத இந்தப் படத்தில் அசின் தந்தையாக ராஜ்கிரண் நடிக்கிறார்.



தில்லாலங்கடி-தமன்னா

## வாய்ப்பை தவறவிட்ட ஜெயம் ரவி

பிடிச்ச படம் ஓடாது. ஓடுற படம் பிடிக்காது. வெறும் கதையாக இருக்கும் போது அதை அனுமானிக்க முடியா மல் அவஸ்தைப்படும் நாயகர்களின் அடிமனசு வேதனைதான் நாம் மேலே சொன்னது. கஜினி படத்தின் கதையை முதலில் கேட்டவர் மாதவன் தான். அப் புறம் ஏராளமான நாயகர்கள் கேட்டு அது வேண்டாம் வேற ஏதாவது கதை இருக்கா என்று முருகதாஸை வெறுப்பேற்றிய தெல்லாம் ரசிகர்கள் அறிந்த கதைதான். இது போல ஆயிரம் கதைகள் இருக்கி றது ஒவ்வொரு நாயகர்களுக்குள்ளும் இவ்வளவு ஏன்? சேது படத்தில் முதலில் நடிக்க ஒப்பந்தம் ஆனவர் தோல்விகளின் நாயகன் விக்னேஷ் தான். பிறகுதான் அதில் விக்ரம் நடிக்க வந்தார். இப்படி தற் போது வந்து தமிழ் சினிமாவைக் கலக்கிக் கொண்டிருக்கும் அங்காடிதெரு படத் தில் முதலில் நடிக்க அழைக்கப்பட்டவர் யார் தெரியுமா? போாண்மையுடன் நடை போட்ட ஜெயம் நடிகர் தான்! என்னவோ இந்தக் கதையின் வெற்றியை அவரால் முன்கூட்டியே உணர முடியவில்லை. இவர் வேண்டாம் என்று மறுத்த பின் பல நாயகர்களிடம் அலைந்த வசந்தபாலன், பிறகுதான் மகேஷ் என்ற புதுமுகத்தைத் தேடிப்பிடித்தார். இவர் தேடிய ஆயிரம் புதுமுகங்களில் மகேஷ்தான் இறுதியா கத் தேர்வு செய்யப்பட்டவர் என்பதால் இவரை ஆயிரத்தில் ஒருவன் என்றே அழைக்கிறார் வசந்தபாலன். சரி இப் போது என்னவாம்? நல்ல கதையை விட்டுட்டேனே என்று புலம்புகிறாராம் ஜெயம் நடிகர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இவ்வார மெயிலில் இவர்...



# அயட் அல்லாவி

ஈராக்கில் நடைபெற்று முடிந்துள்ள பாராளுமன்றத் தேர்தலில் முன்னாள் பிரதமர் அயட் அல்லாவியின் கட்சி வெற்றி பெற்றுள்ளது.

ஆனாலும், பிரதமர் நௌரி மாலிகியின் கட்சியிலும் பார்க்க 2 ஆசனங்களையே கூடுதலாகப் பெற்றிருப்பதால் அல்லாவியின் கட்சிக்கு ஆட்சி அமைக்கும் பெரும்பான்மைப் பலம் இல்லை.

சியா வர்க்கத்தைச் சேர்ந்த வர்த்தக குடும்பமொன்றில் 1945 இல் பிறந்தார் அல்லாவி. அல்லாவியின் தந்தை ஒரு டாக்டர் என்பதுடன் பின்னர் பாராளுமன்ற உறுப்பினராகவும் இருந்துள்ளார்.

அத்துடன் பிரிட்டனிலிருந்து ஈராக் சுதந்திரம் பெற்றமைக்கு அல்லாவியின் பூட்டனாரும் முக்கிய பங்கு வகித்துள்ளார்.

தனது பாடசாலைக் கல்வியைத் தொடர்ந்து 1960 இல் பாக்தாத்திலுள்ள மருத்துவக் கல்லூரியில் பயின்ற அல்லாவி பாக்தாத் கல்லூரியில் பட்டம் பெற்றுக் கொண்டார்.

கல்வியைத் தொடர்ந்து பணியில் தன்னை இணைத்துக் கொண்ட அல்லாவி சில சில அரசியல் நடவடிக்கைகளிலும் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார்.

இந்நிலையில், ஈராக் நிலைவரத்தில் சில வன்முறைகளும் அழிப்புகளும் நடைபெற்ற போது 1971 இல் நாட்டை விட்டு வெளியேறி பிரிட்டனில் தஞ்சம் புகுந்தார் அல்லாவி.

பின்னர் 1975 இல் பாத் கட்சியிலிருந்து பதவி விலகிய அல்லாவி சர்வதேச பாத் கட்சியுடன் இணைந்து செயற்படப்போவதாக அறிவித்தார்.

அத்துடன் 1978 இல் அல்லாவியைக் கொலை செய்வதற்கும் முயற்சி மேற்கொள்ளப்பட்டு அதிலிருந்து உயிர் தப்பினார்.

தனது முதலாவது மனைவியை 1981 இல் விவாகரத்து செய்தார் அல்லாவி. தன்னைக் கொலை செய்ய முயன்ற குற்றச்சாட்டின் பேரிலேயே மனைவியை விவாகரத்துச் செய்தார்.

பின்னர் வேறொருவரை மணம் முடித்த அல்லாவிக்கு இரு மகள்களும் ஒரு மகனும் உள்ளனர்.

தொடர்ந்து அரசியலில் பல்வேறு நிலைகளைக் கண்டுவந்த அல்லாவி 2004 மே 28 முதல் 2005 ஏப்ரல் 7 வரை பிரதமராகப் பதவிவகித்தார்.

அத்துடன் ஆளும் சபையின் தலைவராகவும் அல்லாவி பதவி வகித்தார். தொடர்ந்து அரசியல் மாற்றத்தினால் வேறுகட்சிகள் ஆட்சியைக் கைப்பற்றியது.

இந்நிலையில், தற்பொழுது நடைபெற்ற தேர்தலில் வெற்றிபெற்றுள்ள அல்லாவி பிரதமராவதைத் தடுக்கும் முயற்சியில் உள்ளூர் அரசியல் தலைவர்கள் ஈடுபட்டுள்ள அதேவேளை, ஈரானும் தேர்தல் முடிவுகளை மாற்றும் முயற்சியில் ஈடுபட்டிருந்ததாகவும் கூறப்படுகின்றது.

இருந்தாலும் ஐ.நா.வும் மேற்குலக நாடுகளும் தேர்தல் முடிவுகள் நம்பகரமானதெனக் கூறும் நிலையில், அல்லாவியின் பிரதமர் பதவிக்கான சாத்தியம் அதிகரித்துள்ளது.

யோ.நிமல்ராஜ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






ஒருவர்: ஏனடா நீ ஒரு வேட்பாளரையும் பார்க்க மாட்டேன் என்கிறாய்?
மற்றவர்: அடுத்த எலக்சனில எந்தக் கட்சியில இருப்பாங்களோ! எதுக்கு வம்புல மாட்டிகிடுவான்.




ஒருவர்: வீட்டுக்கொரு வீரன் நாட்டைக் காக்க வரணும் என்றது தப்பாப் போச்சு!
மற்றவர்: ஏன்?
ஒருவர்: வீட்டுக்கொரு வேட்பாளர் நாட்டைக் காக்க கிளம்பிட்டாங்க!




நான் இராத்திரி நித்திரையில பயந்து விட்டேன். ஏன் என்று கேட்கிறிங்களா? யாரோ வாசல்ல நின்று 'என் இனிய தமிழ் மக்களே' என்று கூப்பிட்ட மாதிரி இருந்தது.



ஆசிரியர்: படிப்பிக்கிறது இப்ப சரியான கஸ்ரம் சேர்.
மற்ற ஆசிரியர்: ஏன் சேர்?
ஆசிரியர்: மாதிரி வாக்கு சீட்டைப் பற்றி விளங்கப்படுத்தவே தலை வெடிச்சிடும்... 10 அடி நீளம்.



ஒருவர்: வாக்காளர்களுக்கு பஞ்சம் என்று எப்படி சொல்றீங்க?
மற்றவர்: எல்லோரும் வேட்பாளர் ஆயிட்டாங்க!



ஒருவர்: உங்களுக்கு இந்த எலக்ஷனுக்கு எந்த சின்னம் புடிச்சிருக்கு ?
மற்றவர்: இருக்க் வீடு, பறக்கறத்துக்கு பட்டம், சாப்பிட மாம்பழம், பூட்டிறதுக்கு பூட்டு, ஓட சைக்கிள், போட வெத்திலை எல்லமே புடிச்சிருக்கு.



சம்பு: நீங்க ஏன் பகலில் வெளியில வரப் பயப்படறீங்க
சிம்பு: முதுகிலயும் போஸ்டர் ஒட்டிருவாங்களோ என பயமாயிருக்கு.



ஒருத்தி: ஏன்டி நீ வாக்குச்சீட்டை சுருட்டி வைச்சிட்டியே
மற்றவள்: அதைப் பார்த்து பாய் என்று நினைத்து விட்டேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மழை

வழக்கம் போல் தொடங்கிய
நாளில் திடீர் வானிலை மாற்றம்
மின்னலும் இடியுமாக
வானில் ஆவேச யுத்தம்
'ஓ' என்ற ஓசையுடன்
விண்விட்டு மண் தொடும்
இராட்சத ஊசி மழை
சூழ்கின்ற இருள் போர்வை
திடீர் மழையை சபித்தபடி
சிதறி ஓடும் மனிதர்கள்
நிழற்குடையுள் நிற்கும் என்னுள்
விரிகிறது காட்சி ஒன்று
மழை ஓய்ந்து உடல் தோய்ந்து
வீடு சென்று படி மிதிக்க
அங்கேயும் ஓர் யுத்தம்
மேடையின்றி அரங்கேறும்
ஏன் வந்தாய் பிந்தி என்று
ஏசிடுவான் என் துணைவன்
என்னம்மா சாப்பிடலாம்
எமக்கிப்போ பசியென்று கண்
கசக்கும் என் செல்லங்கள்
ஏவல்கள் முடித்து என்
வேலைகளும் முடிந்து
நான் சாயும் பொழுதினிலே
நனைந்தாயா மழையில் பிள்ளை
தலை துடைக்க வா நீயும்
குடி சூடாய்ப் பானம் என
நடுநடுங்கும் எனக்காக
பரிந்து வந்து பாசம் தந்த
தாய் தந்தை நினைப்பு வர
சிப்பியாய் மூடி விட்ட
இமை இடுக்கு வழியாக
கண்ணீர் வழிந்து என்
கன்னம் வழியோடி
மண் தன்னை முத்தமிடும்
மீள ஒரு மழையாக.

ஆரபி.

## வலிகள்

வலிகளை
வார்த்தைகளால்
வடிக்கும்போது
பேனா கூட
கசிந்துருகி
கண்ணீர்
சிந்துகின்றது
இன்னொரு
இம்சைகளை
இனியும்
வடிக்க முடியாதென்று....

க.நாகேஸ்வரா
சண்டிலிப்பாய்

## ஈழத்திலிருந்து பாரதத்திற்கு...

செந்தமிழ் தேன்மொழி நாடு–என்றும்
பைந்தமிழ் வளர்ந்திடும் பாரத நாடு–எம்
முந்தையர் வாழ்ந்திடும் முடியுடை நாடு–இன்றும்
சொந்தங்கள் வாழ்ந்திடும் இந்திய நாடு!

கங்கை யமுனை காவிரி பாயும்–என்றும்
மங்காப் புகழுடன் இந்துநதி ஓடும்–இது
எங்கள் நாடென இந்தியர் கூடும்
அங்கொரு அரசாய் தமிழகம் மிளிரும்!

கடல்கடந்து இங்கொரு ஏழைப்புலவன்
எழுதும் மடல் இது! செந்நெல் விதைத்தும்
சேற்று நிலம் உழுதும் வாழ்ந்தவர் இன்று
காய்ந்தழுது வருந்துவது தெரியலையோ?

தமிழகமே! காலமும் கடலும் காலையா
எம்மை பிரித்தது! கோலமிழந்த
ஈழத்தவன் அழும் அழுகையும் கேட்கலையோ?
இனியாவது,
கைகொடுப்பீர், கரம் கோர்ப்பீர் இந்த
முள்வேலியைத் தாண்ட!

ஜீ.ஜீவன் (யாழ். இந்துக்கல்லூரி), சதுமலை

### பணம்

நீ இருந்தால் நாம்
எல்லோருக்கும்
உறவு
நீ இல்லையென்றால்
நாம் யாருக்கும்
உறவல்ல

### கனவு

எல்லோர்
வாழ்விலும்
இது வரும்
சிலருக்கு நிஜமாகும்
சிலரை ஏமாற்றும்

### மாலை

கொண்டையில்
சூடினால்
கொண்டை மாலை
கழுத்தில் போட்டால்
கழுத்து மாலை
பொழுது சாய்ந்தால்
வருவது மாலை

### பசி

தானாகவே வரும்
சாப்பாட்டை
நினைக்க வைக்கும்
சிலவேளை
தானாகவே
மறைந்துவிடும்

சுபா,
மானிப்பாய்.




## அன்னைக்கு ஓர் மடல்

அன்னையே !
என் விழிகளில் வழிந்தோடும்
விழிநீரை வழிமறிக்க
நீ வருவாயென காத்திருக்க
விதியென நீ விடைகொடுத்தது ஏன் ?

என் நெஞ்சோ ஆசைகளில்
மண் தூவிவிட்டு–நீ
கானாதேசம் கடுகதியில் சென்றுவிட்
டாய்
கதிகலங்கி போனேன் அம்மா
உன் அரவணைப்பற்று ஆதாரவிழந்து
அகதி தேசத்தில் அநாதையாகி
-விட்டேன்

ஆழம் காண உன் அன்பு மழையிலே
ஆழமற்ற இவ் உறவுகள் அன்பு
எங்கனம் ?

உன் பிரிவின் வலியை தாங்கிச் செல்ல
சற்றேனும் மனம் இடமளிக்கவில்லை
சுற்றம் சொல்லும் துக்க உரையிலும்
பார்ப்போர் படும் பரிதாபத்திலும்
என் ஜீவ ஓட்ட வாழ்க்கை
ஜீரணித்துக்கொண்டே......

பி.மினேஸ், இளவாலை.

## உலகினை உலுக்கும் உயிர்கொல்லி

கனவுகளை சிதறவைத்து
காலமெல்லாம் கண்ணீர்
சிந்தி
கணப்பொழுதில் என்றோ
ஓர்நாள்
காலனின் வரவுக்காக
காத்திருக்கும் எயிட்ஸ்
நோயாலே
வசைமொழிகள் ஏச்சுகள்
வசமாக காதில் பொருந்த
வாட்டிடும் நினைவுகள்
முன்னே
வாழ்ந்த வாழ்க்கைக்கு
அர்த்தம் என்ன?
அந்நிய நாட்டு மோகம்
அலைபோல மனதைத்
தள்ள
அழகான பெண் வரிசை
அப்படியே கொள்ளை
கொள்ள – ஈற்றில்
அழுது புலம்புவதில்
பயன்தான் என்ன?
சவர அலகில் கஞ்சத்தனம்
சாகின்றார் பாதிப்பேர்
சிறுபிழையும் புரியாது
சிறுமைப்பட வேண்டுமா
இவர்கள்?
வைத்தியம் இதற்கில்லை
வந்தபின் வாழ்வு முடியும்
விழிப்புணர்வு பல
உரைத்தும்
வீணாகச் சாவதென்ன?
நிலையான பூமிமீதில்
நிம்மதியான வாழ்வை
நலமாக வாழ்ந்து முடிக்க
நலன் விரும்பிகளே
உதவிடுவீரா?

ரி.சீதா, புத்தூர்.

## உறுதியோடு போராடு

மனவேதனைகளும்
கஷ்டங்களும்
தோல்விகளும்
அவமானங்களும்
துரோகங்களும்
அநீதிகளும்
எல்லையற்ற
துன்பங்களும்
என் வாழ்விலே...
நடுக்காட்டிலே திக்கற்ற
நிலையிலும்...
இருள் சூழ்ந்த
என் வாழ்விலே
ஒளி வீச வந்த கல்வியே
நித்தம் உன் நினைப்பில்
என்னை நான்
மறக்கிறேன்
எதிர்காலத்தை
எதிர்நோக்க
எதிர் நீச்சல் போடுகிறேன்
நிலையற்ற உலகுக்கும்
நிலையான
புகழ் சேர்க்க...

மகாலக்ஷ்மி
ஜெகதீஸ்வரன்,
மூளாய்.

உங்கள் கவிதைகளும் இப்பகுதியில்
வரவேண்டுமோனால்
'Saturday மெயில்'
இல. 336, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்
என்னும் முகவரிக்கு எழுதி அனுப்புங்கள்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருந்து வில்லைகளோடு மட்டும்தானா மருத்துவம்?

டாக்டர் வெ.நாகநாதன்



எமது சமூகத்தில் தற்போது குறித்த வயது எல்லையைத் தாண்டினால் டாக்டரை நாடிச் செல்பவருக்கு ஏதாவது நோய் ஒன்று இருப்பதாக அடையாளம் இட வேண்டிய தேவையுள்ளது.

இல்லாது போனால் டாக்டர் தரமற்றவர் என்று ஒரு புதிய கலாசாரம் காணப்படுகிறது. இவற்றை எல்லாம் விஞ்சி உறவினர் காணும் போது கூட எனக்கு இன்ன இன்ன நோய்கள் இருக்கிறது. உங்களுக்கு எப்படி என்று கேட்கும் நிலைதான் சுகம் விசாரித்தல் என்று அர்த்தப்படுவதாக உருவாகிவிட்டது.



பொதுவாக குறித்த வயதின் பின் ஏதாவது ஒரு நோய் இருப்பதாகக் கூறி அதற்காக வைத்தியசாலை செல்வது அத்துடன் ஏதேனும் மருந்து எடுப்பதாகச் சொல்வது தான் நாகரிகம் என்று சொல்கின்ற நிலை...

இவ்வாறான மக்கள் கூட்டத்தை வியாபார நோக்கங்களில் நகரங்களில் அணுகுவதற்கு மருத்துவ மனைகள் தயாராகிவிட்டன. இங்கு மருத்துவம் மூடு மந்திரம் என்ற நிலை இன்னும் காணப்படுகின்றது. நவீனமருத்துவ உலகின் போக்கினைப் பார்த்தால் மருந்துகளை நோக்கிச் செல்வதாக அன்றி வாழ்க்கை முறை மாற்றங்களையே நாடிச் செல்கின்றது.

சுருக்கமாகக் கூறின் எடுத்த எடுப்பிலேயே மருந்துகளை அள்ளி வழங்கிவிட நவீன மருத்துவ சிந்தனைகள் தற்போது சிந்திப்பதில்லை. அதற்குப் பதிலாக வாழ்க்கை முறையை வடிவமைக்கும் விதம் பற்றியே அதிகம் கவனம் கொள்கின்றது. எடுத்த எடுப்பிலே மருந்துகளைப் பாவிப்பதை தவிர்க்கும் வண்ணமே இவை நகர்கின்றன. ஏனெனில், எமது வாழ்க்கை முறையில் காணப்படும் சிதைவுகள் பற்றியே கவனத்தில் கொள்ளவேண்டும்.

புகைத்தல், மது ஆரோக்கியமற்ற உணவு முறை பருமனை உடலமைப்பு, உடற்பயிற்சி அற்ற தொழில்முறை மன அழுத்தத்தை அதிகரிக்கும் விதமான நட்புகள் இவ்வாறு அமைந்துவிட்ட சிதைவுகள் பல நம்வாழ்வில் காணப்படுகின்றன.

புகைத்தல் மூலம் ஏற்படும் தீமைகளை அடுக்கிக் கொண்டே போகலாம். உயர் குருதி அமுக்க நோயுடைய ஒருவரை எடுத்துக்கொண்டால் புகைத்தல், மதுவருந்துதல், உணவுப் பழக்கம், உடற்பயிற்சி இன்மை போன்றன ஆபத்தை உண்டுபண்ணும் காரணிகளாகவே உள்ளன.

இவற்றின் ஊடு பாரிசவாதம் வரை செல்லக்கூடிய நிலையை உண்டு பண்ணுகின்றன. உடல் எடை அதிகரித்தல் மற்றும் உடற்பயிற்சி இன்மை உணவு ஆரோக்கியமற்ற தன்மை இவையாவும் ஒன்றில் ஒன்று தங்குகின்றன. இவற்றினூடு உடலின் கொழுப்பு சேமிப்பு அதன் அளவுடன் சில வகை ஓமோன்களின் செல்வாக்கு இதனூடு மாரடைப்பு ஏற்படும் வீதமும் மாறுபடுகின்றது.



இவ்வாறே எமது சூழலில் மன உளைச்சல் அதிகரித்துவிட்டது. பொதுவாக எந்தப் பிரச்சினைக்கும் அன்றைக்கு என்ன தீர்வு என்று நினைக்கும் அளவுக்கு சிந்தனைத் திறன் குறைவடைந்துவிட்டது. பிரச்சினைகள் பற்றிக் கூறி முடிவெடுக்க நினைக்கும் ஒருவர் தொழில் தானங்களில் உயர் அதிகாரிகளிடம் பிரச்சினையுடன் தீர்வையும் சுமந்து செல்ல வேண்டிய பரிதாபநிலை, அத்துடன் உடனடித் தீர்வாக மன உளைச்சலை அதிகரிக்கும். இவற்றுக்குத் தீர்வான தியானம், யோகாசனம், நூல் வாசிப்பு இவை எல்லாம் அருகிப் போய்விட்டது.

தற்போதைய மருத்துவ ஆய்வுகள் இவற்றையே கருத்தில் கொண்டு தமது போக்கை மாற்றிச் செல்கின்றன. உதாரணமாக குருதியமுக்கம் உயர்வாகக் காணப்படுகிறது என்றால் உடனே மருந்தினுள்.


மருத்துவ உலகம் குதிக்கவில்லை. தொடர்ந்து குறிப்பிட்ட கால அளவு வரை குருதியமுக்கத்தை அளவிட்டுப் பார்க்கிறது. அதன்பின் சில வாழ்க்கை முறையில் மாற்றங்களை உருவாக்குகிறது. மருந்துப் பாவனை என்று தொடங்கினால் இடையில் நிறுத்தாமல் வாழ்நாள் பூராகவும் உபயோகிக்க வேண்டியேற்படலாம் என்று மருத்துவ உலகம் கவலை கொள்கிறது. இதனால், ஆபத்தற்ற , பக்கவிளைவற்ற உணவு அமைப்பு மாற்றம், உடற்பயிற்சி மன அழுத்தக் குறைப்புக்கு தியானம், யோகாசனம் என்று நகர்கின்றது.

இவ்வாறே மருத்துவ ஆய்வுகளும் எல்லாத்துறைகளிலும் நகர்கின்றன.

அண்மைக்காலங்களில் British Medical Journal வெளியான தகவலில் தற்கொலைகளை மன அழுத்தத்திற்கு பாவிக்கும் மருந்துகள் சில இளவயதினரில் கூட்டுவதாக ஆய்வுக் கற்கைகள் கூறுவதாகத் தெரிவித்திருந்தது. எமது சூழலில் போரின் விளைவாக அதனூடு தன்னம்பிக்கைத் தளர்வுகளை மக்கள் எதிர்கொள்கின்றனர். இவ்வேளையில் ஆற்றுப்படுத்தல் போன்ற ஆபத்தற்ற செயன்முறைகள் மேலும் விரிவுபடுத்தப்பட வேண்டும். சில வருடங்களின் முன் பேராசிரியர் தயா சோம சுந்தரம் வெளிநாட்டு நிபுணர்களைக் கொண்டு மிகவும் திறம்பட ஆற்றுப்படுத்தலை மேற்கொண்டு வந்தமை மெச்சத்தக்க விடயமே ஆகும்.

இவ்வாறு மருந்து மாத்திரைகள் மட்டும் தான் தீர்வல்ல. உடல், உணவு, ஆரோக்கியம், உள ஆரோக்கியம் அது தாண்டிய நிலையில் மருந்துகள் என்றாகிவிட்டது மருத்துவத்தின் போக்கு. மனதும் ஒரு மருந்துதான்.

## விரும்பியதை எப்போது செய்யலாம்?



பாடசாலையில் ஆசிரியர்களும் வீட்டில் தாய்,தந்தையர் உட்பட பெரியவர்களும் அறிவுறுத்துகின்ற ஒழுக்கங்களைப் பின்பற்றியே செயற்பட வேண்டியிருப்பதால் விரக்தியுற்ற சிறுவன் ஒருவன் ஒருநாள் தந்தையிடம் கேட்டான். 'அப்பா, விரும்பியதைச் செய்யக்கூடியதாக எப்போது நான் வளர்ந்து வயது வந்தவனாவேன்' என்று.

தந்தையார் கண் இமைக்கும் நேரம் கூட தாமதிக்காமல் பதில் சொன்னார்,

'மகனே,எனக்கு அது தெரியாது விரும்பியதைச் செய்யக்கூடிய வரை வாழ்ந்தவர் என்று இதுவரை யாருமே யில்லை!'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எரியும் பனிக்கட்டிகள்



பச்சைத் தண்ணீரில் நெருப்பில் எரியுமா? எரிந்தால் அதிசயம் என்பார்கள். ஆனால், பனிக்கட்டியை எரித்து எரிபொருளாகப் பயன்படுத்த முடியும் என்று வியக்க வைக்கிறார்கள் சீன விஞ்ஞானிகள். அமெரிக்கா,ஜப்பான் மற்றும் கொரியாவுடன் கூட்டுச்சேர்த்து சீன ஆய்வாளர்கள் இது தொடர்பான ஆய்வில் ஈடுபட்டு வந்தனர்.

உறைந்திருக்கும் பனிக்கட்டியில் மீதேன் ஹைட்ரேட் என்னும் வாயு சேர்ந்துள்ளது. இது எரியும் தன்மையுடையது. எனவே, அதிகமான அழுத்தத்தில் பனிக்கட்டிகளை உருகச் செய்யும்போது பனிக்கட்டி எரியத் தொடங்குகிறது. இந்த வகையில் பனிக்கட்டியை ஒரு மாற்று எரிபொருளாகப் பயன்படுத்த முடியும் என்பது விஞ்ஞானிகளின் கண்டுபிடிப்பாகும்.

வட அமெரிக்காவின் அலாஸ்கா மாகாணத்தில் 10 ஆண்டுகளுக்குத் தேவையான எரிபொருளை வழங்கும் அளவுக்கு மீதேன் ஹைட்ரேட் இருப்பதாகக் கணக்கிடப்பட்டுள்ளது. அதேபோல் சீனாவில் 35 பில்லியன் தொன் எரிபொருளுக்கு ஈடான மீதேன் ஹைட்ரேட் வாயு இருக்கிறதாம். இது சீனாவுக்கு 90 ஆண்டுகளுக்குப் போதுமானது.

# நோய் தீர்க்கும் ரிங்டோன்கள்



விதவிதமான ஒலிகள் கொண்ட மொபைல் ரிங்டோன்களுக்கிடையே புதுமையாக வந்திருக்கிறது நோயைக் குணமாக்கும் ரிங்டோன்கள். ஜப்பான் நாட்டின் 'மாட்சுமி சுசுகி' என்ற நிறுவனத்தின் ரிங்டோன் தயாரிப்பாளர்கள் நீண்டகால ஆய்வுக்குப் பிறகு இதை வடிவமைத்துள்ளனர்.

பலவிதமான அலைவரிசையில் இதமான இசைக்கருவிகளின் ஒலிகள் மற்றும் பறவைகளின் சப்தம் போன்ற இயற்கை ஒலிகளைக் கொண்டு இந்த ரிங்டோன்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இதைக் கேட்பவர்கள் சோகமாய் இருந்தாலும் சுறுசுறுப்படைகிறார்கள். சோம்பலாய் இருந்தால் குதூகலமடைகிறார்கள். தாலாட்டுக் கேட்பதுபோல விரைவில் தூக்கம் தூண்டப்பட்டு நிம்மதியாக உறங்குகிறார்கள்.

ஜப்பானில் தற்போது அறுவடைக்காலம். இதனால் ஏற்படும் வைக்கோல் மற்றும் தூசு அழற்சியை இந்த ரிங்டோன்கள் கட்டுப்படுத்துகிறது. வேலைக்களைப்பால் பொலிவிழக்கும் தொழிலாளர்களின் முகங்களையும் இந்த ரிங்டோன்கள் கிளர்ச்சிபெறச் செய்கின்றன. எனவே, இந்த ரிங்டோன்கள் ஜப்பானில் சக்கைபோடு போடுகின்றன.

## ஒளிவீசும் கண்ணாடி

'ஸ்டைல்' மற்றும் பார்வைக் குறைபாடு கருதி கண்ணாடிகள் அணியும் பழக்கம் பலருக்கும் இருக்கிறது. கண்ணாடிகள் வெயிலுக்கு ஏற்ப குளிர்ச்சி தரும் வகையில் மாறிக்கொள்ளும் 'கூலிங்கிளாஸ்' மற்றும் கீழே விழுந்தாலும் உடையாத தன்மையுடைய கண்ணாடிகள் என விதவிதமாகவிருக்கின்றன.




நாளும் புதுமையை புகுத்தி வரும் விஞ்ஞானம்,கண்ணாடியில் விளக்கை இணைத்து இருளிலும் ஒளிதரும் வகையில் வடிவமைத்துள்ளது. இந்த ஒளிதரும் கண்ணாடி, இருள் சூழ்ந்ததும் தானாகவே ஒளிரத் தொடங்கும். இதனால் படிப்பது போன்ற வேலைகளை எளிதில் செய்யலாம்.

மேலும், தியேட்டர்,ரெஸ்டோரன்ட் போன்ற இடங்களில் இந்தக் கண்ணாடிகள் மிகவும் பயன்படும். மின்தடை ஏற்படும் நேரங்கள், விமானம் மற்றும் ரயில் பயணங்களில் விளக்கு அணைந்தபின் மற்றவர்களுக்கு இடையூறு இல்லாமல் நமது வேலைகளைச் செய்வது போன்ற நேரங்களிலும் இந்தக் கண்ணாடிகள் கைகொடுக்கும். கண்ணாடியை மடக்கி வைத்தால் விளக்குத்தானாக அணைந்துவிடும்.

பலருக்கும் பயன்படும் இந்தப் புதுமைக் கண்ணாடி.

# விஞ்ஞானமும் தொழில்நுட்பமும்



## அதிசயிக்கத்தக்க கண்டுபிடிப்பு



பல்லிகளுக்கு திடீரென்று வால் துண்டிக்கப்பட்டால் மீண்டும் வளர்ந்துவிடும். அதுபோல் மனிதர்களிலும் பாதிக்கப்பட்ட பகுதிகளை மீண்டும் வளரச் செய்ய நவீன வழி கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

நீரிலும் நிலத்திலும் வாழும் இருவாழ்வி உயிரினங்கள் உட்பட சில உயிரினங்களில் மட்டும் இழந்த உறுப்புகள் எவ்வாறு புதுப்பிக்கப்படுகின்றன? என்று ஆராய்ந்த போது அதற்குக் காரணமாகவிருக்கும் மரபணுக்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன. 'பி21' என்று அந்த மரபணுக்களுக்குப் பெயரிடப்பட்டுள்ளது. இந்த மரபணுக்கள் தான் ஹீலிங் முறையில் பாதிக்கப்பட்ட செல்கள் மறு உற்பத்தியாகக் காரணமாகவிருக்கின்றன. இவற்றின் மூலம் தான் எலிகளின் உடலில் காயமேற்பட்ட தோல்பகுதி மீண்டும் வளர்கிறது.பல்லி இனங்களிலும் துண்டிக்கப்பட்ட உடல் பாகங்கள் மறுபடியும் வளர்ந்துவிடுகின்றது.

எனவே, இந்த மரபணுக்களைக் கொண்டு தேய்ந்துபோன மற்றும் பாதிக்கப்பட்ட பாகங்களை வளர வைக்க முடியும் என்று தெரியவந்துள்ளது. மனிதனைப் பொறுத்தவரையில் இது சில நேரங்களில் தான் சாத்தியமாகும். காயப்பட்ட இடங்களில் செல்களை மீண்டும் வளர வைக்க முடியும் என்று கண்டறியப்பட்டுள்ளது. செயல்படாத பாகங்கள்,தேய்ந்த பாகங்களைப் புதுப்பிக்கும் முறை இன்னும் அறியப்படவில்லை. எதிர்காலத்தில் பல்வேறு அதிசயிக்கத்தக்க மாற்றங்களை இந்த 'பி21' மரபணுக்கள் மூலம் செய்துகாட்ட முடியும் என்று விஞ்ஞானிகள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

இந்தக் கண்டுபிடிப்புக்குச் சொந்தக்காரர்கள் பென்சில்வேனியா நாட்டின் பிளேடில்பியா நகரில் உள்ள விஸ்டார் இன்ஸ்ரியூட் ஆய்வாளர்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Saturday மெயில் சிறுகதை

# புன்னகை இழந்த பூ

வட்டுக்கோட்டை அன்பு

அந்திசாயும் மாலைப் பொழுது அவர் மனதினை ரணமாக்கிக் கொண்டிருந்தது. அவ்வேளை இயற்கையின் வனப்பினை ரசிப்பதற்கு அவரது கண்கள் இடம் கொடுத்தாலும் மனது அதனை உள்வாங்க மறுத்தது. எதையோ இழந்தவர் போல் ஆழ்ந்த சிந்தனையில் இருந்தவளை 'கண்ணா என் நெஞ்சில் காதல்காயம் ஆறுதல் சொல்லும் ஆகாயம்' எனும் மஞ்சள் வெயில் மாலையிலே நிகழ்ச்சியில் ஒளிபரப்பான பாடல்வரிகள் திசை திருப்பின. என்னடி ஒரு மாதிரி இருக்கா உடம்புக்கு ஏதும் முடியலயா என்றவாறு அவளருகே வந்து அமர்ந்தாள் உயிர்த் தோழியான ஜெனிபர். அதெல்லாம் ஒன்றும் இல்லடி என்று அமைதியாய் ஒரு பதில் மட்டும் வந்தது. ஒரு கேள்வி கேட்டால் ஆயிரம் பதில் கூறும் இவளா? இப்படி என்று மனம் நொந்தாள் ஜெனிபர். தனது எண்ணங்களை எங்கோ பரவவிட முயற்சித்தவளை இடைமறித்து ஆங்கிலப் பாடநெறிக்கான இறுதித் தேர்வு வருகிறது என்றாயே படிச்சு முடிச்சாச்சா. அதற்குப் பதிலேயில்லை. அவளின் கண்கள் பட்டும் ஏக்கத்துடன் நோக்கின. ஜெனி ஜெனி அவளது தாயார் அழைக்கும் சத்தம் கேட்டது. ஏய் இங்கபாரு எதுக்குமே கவலைப்படாத எல்லாமே நல்லபடியா நடக்கும். சரி போய் ஆங்கிலத்தைப்படி என்று தட்டிக்கொடுத்து விட்டு விடை பெற்றாள். ஜெனிபர் படிப்பதற்காக மேசைமீது இருந்த பைலைப் புரட்டினாள். அதற்கும் மனம் இடமளிக்கா நிலையில் அங்கிருந்து நகர்ந்து படுக்கையில் சாய்ந்தாள். மணித்துளிகள் 11ஐக் கடந்துவிட்ட நிலையிலும் தூக்கம் விழிமறந்து கண்ணீரில் மூழ்கியது. மனது நினைவினை மீட்கிறது.



***

கவிதா அப்போது க.பொ.த.சாதாரணதரம் இறுதியாண்டுத் தேர்வுக்காய் காத்திருந்தாள். அன்று நவம்பர் மாதம் 11 ஆம் திகதி. 2005 கவியின் வாழ்விலே மறக்க முடியாத திருப்பு முனை ஏற்பட்ட நாள். ராகுல் கவியின் மாமா மகன். பல வருடங்களின் பின் தனது சொந்த ஊருக்கு வந்திருந்தான். அன்று அவன் கவி வீட்டிற்கும் வந்திருந்தான். ராகுல் நண்பர்களுடன் வந்திருந்ததால் அவனை சிறு வயதில் பார்த்த அங்க அடையாளங்களில் எப்படியோ கண்டுபிடித்தாள். அறைக்குள்ளிருந்தவாறு கதவின் துவாரம் வழியே ராகுலைப் பார்த்த வண்ணம் இருந்தாள். ராகுல் கவியின் குடும்ப உறவுகளுடன் உரையாடிக்கொண்டிருந்தான். கவி என்று அம்மா அழைக்கவே புத்தகமும் கையுமாய் வெளியில் வந்தவளை, என்ன கவி வளந்திட்டீங்க, கிளாஸ் போய்ட்டு வந்தீங்களா? என்றவனை நிமிர்ந்து பார்த்தவள் முதற்பார்வையிலே மனதைப் பறிகொடுத்தாள் ராகுலிடம். அவளால் அதற்கு மேலே அங்கே நிற்கமுடியவில்லை. அங்கிருந்து நகரமுற்பட்டாள். சரி மாமா, மாமி எல்லோருக்கும் நான் போட்டு வரப்போறேன், நேரமாகுது என்றபடி கவியை மறுபடியும் நோக்கினான் கவிக்கு அன்றிரவு முழுவதும் ஏதோபோலிருந்தது. நான் படிக்கிற பிள்ளை இந்த வயசில காதல் அப்டின்னு... மனது கிடந்து புலம்பியது. நான் நினைப்பது தப்பா? இல்லையா? என்று பலகேள்விகள் கவிமனதில் இருந்தாலும் அவளுக்கு ராகுலை ரொம்பவே பிடித்திருந்தது. அவனது பேச்சு, எல்லோரிடமும் அன்பாய் பழகும் விதம் எல்லாமே கவிமனதிற்குள் ராகுலை சிறைவைத்தது. இது சாத்தியமாகுமா? அவளது உணர்வுகள் ஆமாம் என்றே பதில் தந்தது. சரி நடப்பது நடக்கும் என்று அவன் நினைவுடனேயே தூங்கிவிட்டாள். காலையில் எழுந்ததும் தனது தோழியான ஜெனிபரிடம் ஆலோசனை கேட்டாள். அதெல்லாம் சரிடி ராகுலோட மனச தெரிஞ்சுக்க வேண்டாமா. முதல்ல அதைச் செய் எனக்கூறிய தோழியின் வார்த்தைகளும் சரியாகவே பட்டது. பரீட்சையும் நெருங்கிவிட்டது. முதலில் பரீட்சையை திருப்திகரமாக எழுதி முடித்தாள். மறு நாள் ராகுலைச் சந்திப்பதற்கு அவள் தனது மாமா வீட்டிற்குப் போயிருந்தாள். தன்னோட உணர்வுகளை எப்படியாவது ராகுலிடம் கூறிவிடத் துடித்தாள். ஆனால் மிஞ்சியது ஏமாற்றம். அவன் அவசரமாய் ஊருக்குக் கிளம்பிக் கொண்டிருந்தான். சரி கவி நான் ஊருக்குக் கிளம்பிறன் இனி எப்ப எப்பவோ? தெரியாது இரண்டு நாளைக்கு இங்க தங்கிட்டுப் போங்க சரியா? என்றவனுக்கு நா ஆம் என்று பதில் தந்தது. மனதுகிடந்து துடித்தது. அவன் றோட்டிலிருந்து மறையும்வரையும் பார்த்துக் கொண்டிருந்த கவியால் மேலும் அங்கே நிற்கமுடியவில்லை.

சரிமாமி பின்னேரம் கொம்பியூட்டர் கிளாஸ் போய்ட்டு வாறன் என்று வீடு வந்து சேர்ந்தவளால் எந்த வேலையையும் நிதானமாய் செய்ய முடியவில்லை. இதனால் தாயிடம் ஏச்சும் வாங்கினால். ஒரு முடிவெடுத்தவளாய் அன்புள்ள ராகுல்... என்று தொடங்கி தனது மனதிலுள்ள ஆசைகளை பேனாமுனையில் கொட்டித் தீர்த்து... இப்படிக்கு கவி என்று முடித்து கடிதம் அனுப்பியும் விட்டாள். கவியின் குடும்பம் பல அங்கத்தவர்களைக் கொண்டது. இவள் இவ்வாறு செய்தது வீட்டில் எவருக்குமே தெரியாது. பதிலுக்காய் காத்திருந்தாள் பதில் வரவேயில்லை. அப்போது ராகுலின் ஊரில், இராணுவப் பிரச்சினை பதில் வராமைக்குக் காரணம் இதுதான் என்று உணர்ந்தவள் எப்படியோ ராகுலிடம் தனது மனதிலுள்ளதை கூறிவிட்டேன் என்று நம்பிக்கையுடனும், ராகுலின் நினைவுடனும் வாழ்ந்தாள். இவ்வாறிருக்கையில் ஒருநாள் ராகுலின் ஊரில், இராணுவப்பிரச்சினை அதிகரித்து விட்டது. பல சனம் இறந்திட்டுதாம். சிலதுகள் இடம்பெயர்ந்தும் விட்டுதாம் என்ற தகவல் அவளின் காதுகளுக்கு எட்டியது. கடவுளே என்னோட ராகுல்... துடித்துப்போனாள் கவி. அவள்முகம் புன்னகையிழந்தது. கடவுளே என் ராகுலை எனக்கே தந்துவிடு, அவனை மேலும் மேலும் சோதிக்காதே என்று தினமும் மனதிற்குள் வேண்டிக்கொண்டு கடவுளே கதி என்றிருந்தாள்.

கவி நீ கவலைப்படாத உன்னோட ராகுல் உன்னிடம் வருவான் என்று அடிக்கடி ஆறுதல் கூறுவாள் ஜெனிபர். அவளின் அந்த வார்த்தைகள் கவியின் மனதிற்கு சிறு ஆறுதலளிக்கவே குடும்ப உறவுகளுடன் பொய்யான புன்னகையில் வலம் வந்தாள்.

ராகுல் 16 வயதினிலே பெற்றோரைப் பிரிந்து நாட்டின் போர்ச்சூழல் காரணமாய் தனது நண்பர்கள் வீட்டில் அவ்வூரில் இருந்தான். கவிக்கு ராகுலை பிடித்த அந்த நிமிடமே அவனுக்கு ஒரு அன்புகலந்த சந்தோஷமான வாழ்வினை தான் கொடுக்கவேண்டும் என்றும் அவனுக்காகவே நான் வாழவேண்டும் என்றும் உறுதி கொண்டவள், இன்று அவனின் நிலைமை தெரியாது தவித்துக் கொண்டிருக்கிறாள். இவ்வாறு நகர்ந்த நாட்களில் வலியுடன் கலந்த வாழ்வில் வசந்தமாய் ஓர் செய்தி ராகுலின் ஒன்று விட்ட தங்கை மூலம் கிடைத்தது. அண்ணா போனில் கதைத்தது ஊருக்கு வருகிறாராம். மனம் சந்தோஷவானில் சிறகடித்தது. கடவுளுக்கு ஆயிரம் தடவை நன்றி சொல்லியது மனம். தன்னுயிர் தோழியிடம் விடயத்தைக் கூறி சந்தோஷப்பட்டாள். அவளின் முகத்தில் நான்கு வருடத்தின் பின் தோன்றிய மெய்யான புன்னகையை ரசித்தாள் ஜெனிபர். ஹோ கவி எல்லாமே சக்சஸ்தான் என்று கூறி அவள் மனதை குளிரவைத்தாள் உயர்த் தோழி. எதிர்பார்த்துக் காத்திருந்தாள் ராகுலின் வரவை கவி.

அன்று அவளின் வாழ்வில் மறுபடியும் புன்னகை மறையும் என்று சற்றும் எதிர்பார்க்கவில்லை அந்தக் கவி எனும் ஜீவன். தனது தாயுடன் காலை சமையலுக்காக உதவி செய்துகொண்டிருந்தாள். என்ன ராகுல் இப்படித் திடீரென்று இவ்வளவு பிரச்சினைகளுக்குப் பின்னும் நம்பவே முடியவில்லை. வா ராகுல் என்றபடி ராகுலை வீட்டிற்குள் அழைத்துவந்தாள் கவியின் அக்காவான விஜி. அம்மா, அக்கா, அப்பா, தம்பி என்று எல்லோருமே ராகுலுடன் பிரச்சினைகள் பற்றி சுகம் விசாரித்தும் உரையாடிக் கொண்டிருந்தனர். கவி ஜன்னல் வழியே ராகுலைப் பார்த்தாள். அவனைக் கட்டி அணைத்து அழவேண்டும், தான் பட்ட வேதனைகளைக் கூறவேண்டும் என்றெல்லாம் மனதுகிடந்து துடித்தது. கவியிடம் அவ்வளவு நேரமாகியும் எதுவும் ராகுல் பேசாதது அவள் மனதை ஊசி கொண்டு தைத்தது போலிருந்தது. மதியம் சாப்பாடு முடித்து தனிமையில் இருந்தான் ராகுல். கவியும் அவனருகில் சென்று அமைதியாய் இருந்தாள். என்ன கவி ஏதோ யோசனை போல. சீச்சீ அப்படி ஒன்றும் இல்லையே. மீண்டும் அமைதி. செக்கன் துளிகள் மெதுவாய் நகர்ந்தன. மீண்டும் ராகுல் என்ன படிப்பெல்லாம் முடிஞ்சுதா. ஆமாம் என்றவள் தனது A/L பெறுபேற்றினைக் கூறிவிட்டு தலையைக் குனிந்தபடி உட்கார்ந்திருந்தாள். தொடர்ந்தான் ராகுல். என்ன கவி கடிதம் எல்லாம் போடு றீங்க...ஏன் போடக்கூடாதா?... சிறு அமைதிக்குப்பின் இல்ல கவி என்னோட நிலைமை உங்களுக்குத் தெரியும் தானே... இப்படி எண்ணங்கள் உங்கமனதில் இருந்தால் தயவு செய்து மறந்திடுங்க. இதெல்லாம் சரிவராது.... கவியின் மனது தூண்டிலில் பட்ட மீனாய் துடித்தது. கண்கள் நீர்த்துளியாக மூடிக் கொண்டது. ராகுல் அதனைக் கவனித்து விட்டான். ப்ளீஸ் கவி சொன்னால் புரிஞ்சுக்கணும். நீங்க படிச்ச பெண்ணுதானே.... பதிலேதும் கூற முடியாமற் தவித்தாள் கவி. சரி கவி அம்மா, அப்பாவோட சொல்கேட்டு நல்ல பிள்ளையா இருக்கணும் சரியா? இனிமே எந்த யோசனையும் இருக்கக் கூடாது.

மீண்டும் என்னோட நிலை புரிஞ்சா சரி. நான் வாறன் என்று கவியிடமிருந்து விடை பெற்று குடும்பத்தவர்களிடமும் சென்று விடை பெற்றான்.

தனது கனவுகள், எதிர்பார்ப்புக்கள் ஒரு நிமிடத்தில் சிதறிக்கப்பட்டதை எண்ணி எண்ணி அறைக்குள் தாளிட்டு விட்டு இருந்து அழுதாள். ராகுல், ராகுல், ராகுல், அவளது கண்கள் டயறியில்.... தினமும் அவனது பெயரை எழுதி ரசித்த அந்த டயறி கண்ணீரில் நனைய விரக்தியுடன் அறையிலிருந்த அவளை ஜெனிபராலும் ஆறுதல் படுத்த முடியவில்லை. அன்றிரவு எல்லோரும் தூங்கியபின் தான் நிரந்தரமாய் தூங்க முடிவெடுத்தவளின் கண்முன் குடும்ப உறவுகளின் சந்தோஷம் எனது சந்தோஷத்திற்காக அவர்களை ஏன் காலம் பூராகவும் அழவைக்க வேண்டும். மீண்டும் புன்னகையிழந்தது கவிப்புறா!

மணி 12 ஐக் கடந்தது. தலையணை கண்ணீரில் தோய்ந்தது. அவனது முதற்பார்வையின் நினைவுகள் மனதில் வந்து வந்து போனது. வேதனையில் காத்திருக்கின்றாள் தனது காதலின் விடியலுக்காய்...வலியுடன் காத்திருக்கின்றாள் ராகுல் சுதந்திரத்தின் விடியலுக்காய்... மீண்டும் மறுநாள் காலையில் பாசம்வைப்பதே பாவமானதே கண்ணீரில் காதல் நீந்துதே... பாடல்வரிகள் கண்ணில் நீர்த்துளியை வரவைக்கவே அதனை ஒருவாறு துடைத்து விட்டு பொய்யான புன்னகையுடன் குடும்ப உறவுகள் முன் ஒரு நடைப்பிணமாய் வாழ்கிறாள். தொடரும் ராகுலின் நினைவுகள் கவியின் உயிருள்ளவரை...

நீங்களும் சிறுகதை எழுத விரும்பினால்
2 A4 தாள்களுக்கு மேற்படாத வகையில் எழுதி
'Saturday மெயில் சிறுகதை'
இல. 336, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்
என்னும் முகவரிக்கு அனுப்புங்கள்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாலியல் நோய்கள் அதிகரிப்புக்கு 'பேஸ்புக்'கும் காரணமா?

இங்கிலாந்தில் செக்ஸ் தொடர்பான நோய்களின் அதிகரிப்புக்கு பேஸ்புக் முக்கிய காரணமாக திகழ்வதாக ஆய்வு ஒன்று தெரிவிக்கிறது.

செக்ஸ் நோய்கள் அங்கு நான்கு மடங்கு அதிகரித்து விட்டதாம். இதற்கு பேஸ்புக் தான் காரணமாக இருப்பதாக அந்த ஆய்வுத்தகவல் தெரிவிக்கிறது.

இங்கிலாந்தில் சிபிலிஸ் நோயின் தாக்குதல் கடந்த காலங்களை விட தற்போது நான்கு மடங்கு அதிகரித்து விட்டதாம். இதற்கு முன்பின் அறியாதவர்களுடன் பேஸ்புக் மூலம் தொடர்பை ஏற்படுத்திக்கொண்டு செக்ஸ் உறவு கொள்வதுதான் காரணம் என்கிறது அந்த ஆய்வு.

இது குறித்து ஆய்வை நடத்தியபோது சுகாதார நிறுவனத்தின் இயக்குநர் பீற்றர் கெல்லி கூறுகையில், சிபிலிஸ் நோயின் தாக்குதல் நான்கு மடங்கு அதிகரித்துள்ளது. ஏராளமான இளம் பெண்கள் இந்த நோயால் பாதிக்கப்பட்டு வருகின்றனர்.

இவர்களில் பெரும்பாலானவர்கள், இணையத்தளங்கள் மூலம் குறிப்பாக பேஸ்புக் மூலம் அறிமுகம் இல்லாதவர்களுடன் தொடர்பை ஏற்படுத்திக்கொண்டு செக்ஸ் உறவு வைத்திருப்பதாக கூறியுள்ளனர்.




சமூகக்கட்டமைப்பு இணையத்தளங்கள், சம்பந்தமே இல்லாதவர்களைக் கூட எளிதில் தொடர்பு கொள்ள வைக்க உதவுகிறது. இது செக்ஸ் நோய்களின் அதிகரிப்புக்குக் காரணமாகிவிடுகிறது.

20 ஆண்டுகளுக்கு முன்புதான் சிபிலிஸ் நோய் மிகப் பெரிய வியாதியாக இருந்தது. அப்போது ஆணுறையை அதிகம் பேர் பயன்படுத்தியதில்லை. ஆனால் இப்போது ஆணுறை குறித்த விழிப்புணர்வு அதிகம் உள்ள இந்தக் காலகட்டத்திலும் சிபிலிஸ் வேகமாக பரவுவது வியப்பாக உள்ளது.

பெண்களில் 20 முதல் 24 வயதுக்குட்பட்டோருக்குத்தான் சிபிலிஸ் அதிகம் தாக்கியுள்ளது. ஆண்களைப் பொறுத்தவரை 25 முதல் 34 வரையிலானோரே பாதிக்கப் பட்டுள்ளனர்.

இன்டர்நெட் மூலம் அறிமுகமாகும் பெண்களுடன் செக்ஸ் உறவு வைத்து விட வேண்டும் என்று பெரும்பாலான ஆண்கள் நினைக்கிறார்கள். இவர்களைப் போன்றோருக்கு பேஸ்புக் மிகப் பெரிய வடிகாலாக உள்ளது என்றார் கெல்லி.

இந்த பரபரப்பு ஆய்வு குறித்து பேஸ்புக் நிறுவனம் இதுவரை விளக்கம் தரவில்லை.

# பெருகி வரும் குற்றங்கள்

ஆபாச ஈமெயில், ஆபாச எஸ்.எம்.எஸ்., இணையத்தள மோசடி எனப் புதுசு புதுசாக குற்றங்க்ள் பெருகி வருகிறது. இந்தக் குற்றங்கள் இதுவரை தனிப்பட்ட மனிதனைப் பாதிப்பவையாகத்தான் இருந்திருக்கின்றன. ஆனால், ஒரு சமுதாயத்தையே பாதிக்கும் வகையில் மிகப்பெரிய குற்றங்கள் நிகழத்தொடங்கியுள்ளன.

பெண் என்றாலே ஒருவித போதையுடன் பார்க்கும் சில வக்கிரபுத்திகொண்ட விஷமிகள் பலர் மக்கள் மத்தியில் வலம் வருகின்றனர். அப்படிப்பட்ட சிலர் தகவல் பரிமாற்றத்திற்குத் துணையாகவிருக்கும் செல்போனை ஆபாசக் கருவியாகப் பயன்படுத்தி வருகின்றனர். செல்போனில் உள்ள கமெராவைப் பயன்படுத்தி ஷொப்பிங், வேலைக்குச் செல்லும் பெண்கள், ரயில் நிலையம் செல்லும் பெண்கள், கோவிலுக்குச் செல்லும் பெண்கள் எனப் பெண்களை ஆபாசமாகப் படம் எடுத்துள்ளனர். அதை இணையத்தளம் மூலமாகப் பரப்பி வருகின்றனர்.

வேலைக்குச் செல்லும் பெண்கள், தோழிகளுடன் ஷொப்பிங் செல்லும் கல்லூரி மாணவிகள், டாப்ஸ், ஜீன்ஸ் பேண்ட் அணிந்து செல்லும் பெண்கள், சேலை கட்டிச் செல்லும் பெண்கள் போன்றோரைப் பின் தொடர்ந்து சென்று அவர்களுக்குத் தெரியாமல் அவர்களது பின் அழகைப் படம் பிடித்துள்ளனர். பெண்களின் பின்னால் செல்போனில் பேசிச் செல்வது போலச் சென்று கமெராவில் படம் எடுத்துள்ளனர்.


இத்தகைய காட்சிகளைச் சில குறிப்பிட்ட இணையத்தளம் மூலமாகப் பரப்பியுள்ளனர். ரயில் நிலையத்தில் ரயில் பெட்டிக்குள்ளிருந்து ஒரு பெண்ணை ஆபாசமாகப் படம் பிடித்துள்ளனர். ஜீன்ஸ், பேண்ட், ரிசர்ட் அணிந்து செல்லும் பெண்களையும் தமிழ்க் கலாசாரம் மாறாமல் சேலை கட்டித் தலைவாரி பூச்சூடிச் செல்லும் பெண்களையும் படம் பிடித்துள்ளனர்.

இந்தப் படங்களை அனுப்பினால் குறிப்பிட்ட தொகை கிடைக்கும் என்பதால் குறிப்பிட்ட ஒரு இணையத்தளத்திற்கு அனுப்பிவைத்து இலட்சக்கணக்கில் பணத்தைப் பெற்றுள்ளனர். இந்த இணையத்தளம் தொடங்கப்பட்ட ஒரு சில வாரங்களிலேயே ஆயிரக்கணக்கான பேர் இந்த இணையத்தளத்தைத் திறந்து ஆபாசக் காட்சிகளை டவுன்லோட் செய்துள்ளனர். இதன் மூலம் அந்த நிறுவனத்திற்கு ஏராளமாகப் பணம் குவிந்துள்ளது.

அதோடில்லாமல் அதிக நேயர்கள் பார்க்கும் இணையத்தளம் என்ற விளம்பரத்துடன் இத்தகைய ஆபாசப் படங்கள் பலரது ஈமெயில்களுக்கும் அனுப்பப்பட்டுள்ளது. பணக்கார இளைஞர்கள் இத்தகைய இணையத்தளங்களுக்காக ஆயிரக்கணக்கில் பணத்தை வாரி இறைத்து வருகின்றனர்.

தினந்தோறும் குடும்பப் பெண்களின் ஆபாசப் படங்களை இந்தத் தளத்தில் இணைத்து வருவதும் தெரியவந்துள்ளது. பெண்களை செல்போன் கமெரா மூலம் படம் பிடிக்கும் குற்றங்களைத் தடுக்கத் தீவிர நடவடிக்கையெடுக்கப்பட வேண்டியது அவசியமாகியுள்ளது. கல்லூரிகள், திரையரங்குகள், ரயில் நிலையம், ஆஸ்பத்திரி, கோவில்கள் போன்றவற்றில் செல்போன்களைப் பயன்படுத்த வரைமுறை உருவாக்க வேண்டும்.

ஷொப்பிங் நிறுவனம், மார்க்கெட் வீதிகளில் பெண்களை ஆபாசப் படமெடுக்கும் நபர்களை உடனடியாகத் தடுக்க முடியாது. இருந்தாலும் அத்தகைய நடவடிக்கையில் ஈடுபடுபவர்களை கையும் களவுமாகப் பிடிப்பதற்குத் தேவையான கண்காணிப்பு ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'நிறம்' மாறும் ஆட்டம்







**ஐ.பி.எல். போட்டிகளில் அழகுப் பெண்களின் அசத்தல் ஆட்டம் ரசிகர்களை கிறங்கடிக்கிறது. கவர்ச்சி உடையில் கலக்கும் இவர்கள் பவுண்டரி, சிக்ஸர்கள் அடிக்கப்படும்போது உற்சாக நடனமாடுகின்றனர். இது கிரிக்கெட் தெரியாதவர்**களையும் போட்டியை கண்டுகளிக்கத் தூண்டுகிறது.

ஆரம்பத்தில் நடனப் பெண்களின் வரவு இந்திய கலாசாரத்துக்கு எதிரானது என விமர்சிக்கப்பட்டது. தற்போதும் சில அமைப்புகள் ஆங்காங்கே எதிர்ப்புத் தெரிவிக்கின்றன. இத்தகைய சர்ச்சைகளைக் கடந்து ஐ.பி.எல். தொடரின் ஒரு முக்கிய அம்சமாகவே 'சியர் கேர்ள்ஸ்' மாறிவிட்டனர்.

அமெரிக்காவில் 'சியர் கேர்ள்ஸ்' மிகவும் பிரபலம். என்.பி.ஏ.கூடைப் பந்து, என்.எல்.எப். கால்பந்து போட்டிகளில் இவர்களின் சாகச நடனங்களைக் காணலாம். இது இந்தியாவில் ஐ.பி.எல். 'ருவென்ரி-20' தொடர் மூலம் அறிமுகமானது. பொலிவூட் நட்சத்திரங்களான ஷில்பா ஷெட்டி, பிரித்தி ஜிந்தா, கத்ரினா கைப், தீபிகா படுகோனேயுடன் சேர்ந்து நடனப் பெண்களும் உற்சாகம் தர மைதானத்துக்கு வருவதால் போட்டிகளைப் பார்க்கும் ரசிகர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது.

**நிறவெறி சர்ச்சை:**

தற்போது நடக்கும் மூன்றாவது தொடருக்கு வெளிநாட்டிலிருந்து 50 நடனப் பெண்கள் வரவழைக்கப்பட்டுள்ளனர். இவர்களில் 40 பேர் தென்னாபிரிக்காவைச் சேர்ந்தவர்கள். மீதமுள்ள 10 பேர் உக்ரனைச் சேர்ந்தவர்கள். இம்முறை அனைத்துப் பெண்களும் வெள்ளை நிறம் கொண்டவர்கள். கறுப்பு நிறமுடையவர்கள் யாரும் இடம் பெறவில்லை. இது தொடர்பாக நிறவெறி சர்ச்சை கிளப்பப்பட்டுள்ளது.

2008 இல் நடந்த முதலாவது தொடரில் பிரிட்டனைச் சேர்ந்த கறுப்பினப் பெண்கள் இடம் பெற்றிருந்தனர். மொஹாலியில் நடந்த ஒரு போட்டியின்போது இவர்களைச் சிலர் கேலி செய்ததாகப் பிரச்சினையேற்பட்டது. இதனால் தான் இம்முறை கறுப்பினத்தவர்கள் புறக்கணிக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. இக்கருத்தை மறுத்த ஐ.பி.எல். அமைப்பின் துணைத் தலைவர் நிரஞ்சன் ஷா கூறுகையில்;

'நிற வேறுபாட்டில் எங்களுக்கு நம்பிக்கையில்லை. நிறத்தை வைத்து யாரையும் தேர்வு செய்யவில்லை' என்றார்.

இது பற்றி தென்னாபிரிக்காவின் முன்னாள் நடன நட்சத்திரம் பெனிகி கூறுகையில்;

'பார்ப்பதற்கு அழகாக இருக்கிறாரா, நன்றாக நடனம் ஆடுகிறாரா, சிறப்பான உடற்தகுதி உள்ளதா என்றுதான் பார்ப்போம். இதனடிப்படையில் தான் 'சியர் கேர்ள்சை' தேர்வு செய்வோம். நிறம் ஒரு விடயமே இல்லை. இந்தியாவில் தான் இப்பிரச்சினை கிளப்பப்பட்டுள்ளது' என்றார்.





**'குளுகுளு' பெங்களூர்;**

இப்படி சர்ச்சைகள் ஏற்பட்டாலும் நடனப் பெண்கள் தங்களது பணியைச் சிறப்பாகவே செய்கின்றனர். மைதானத்தில் அசத்தல் குத்தாட்டம் மூலம் ரசிகர்களை மகிழ்விக்கின்றனர். இவர்களது பெயர், கொடுக்கப்படும் இலட்சங்கள் போன்றவை இரகசியமாக வைக்கப்படும். எதையும் ஊடகங்களிடம் தெரிவிக்கமாட்டார்கள். தங்களுக்குப் பிடித்த ரசிகர்கள் பட்டாளம் குறித்து நடனப் பெண்கள் கூறுகையில்;

'இந்தியாவின் பல்வேறு நகரங்களில் ஆடியுள்ளோம். எங்களுக்குப் பிடித்த மூன்று இடங்களை மட்டும் குறிப்பிட விரும்புகிறோம். முதலிடம் பெங்களூருக்குத்தான்' இங்குள்ள ரசிகர்கள் மிகவும் நல்லவர்கள். குளிர்ந்த தட்பவெப்பமும் நன்றாக இருக்கும். அடுத்த இடத்தை மும்பைக்குக் கொடுக்கலாம். இங்கு எவ்விதப் பிரச்சினையும் ஏற்பட்டதில்லை. மூன்றாவது இடத்தை டில்லி பெறுகிறது. மொஹாலி தான் மிகவும் மோசம். இங்குள்ள ரசிகர்களைச் சமாளிப்பதும் மிகவும் கடினம்' என்றனர்.






# வெற்றிக்கு கைகொடுக்கும் மிதவேகம்

மூன்றாவது ஐ.பி.எல். 'ருவென்ரி-20' தொடரில் மிதவேகப்பந்து வீச்சு துடுப்பாட்ட வீரர்களுக்குப் பெரும் அச்சுறுத்தலாக அமைந்துள்ளது. வேகத்தைக் குறைத்து துல்லியமாகப் பந்துவீசும் பந்து வீச்சாளர்கள் விக்கெட் வேட்டை நடத்தி வருகின்றனர்.

டெஸ்ட் மற்றும் ஒரு நாள் போட்டிகளில் வேகப்பந்து வீச்சாளர்கள் அசத்தி வருகின்றனர். மணிக்கு 160 கிலோமீற்றர் வேகத்தில் பந்துவீசும் பந்துவீச்சாளர்களுக்கு நல்ல வரவேற்புண்டு. ஆனால், 'ருவென்ரி-20' போட்டிகள் அதிரடி ஓட்டக் குவிப்பை அடிப்படையாகக் கொண்டவை. இதனால் எவ்வளவு வேகத்தில் பந்து வீசினாலும் துடுப்பாட்ட வீரர்கள் பவுண்டரி, சிக்ஸருக்குப் பந்தை விரட்டுகின்றனர். 'ருவென்ரி-20' போட்டிகளின் ஆரம்ப கட்டத்தில் வேகப்பந்து வீச்சாளர்கள் பெரிதும் பாதிப்புக்குள்ளாயினர். அதற்குப் பின் தற்போது சுதாகரித்துக் கொண்டனர்.



**வெற்றி ரகசியம்:**

2008 ஆம் ஆண்டு இந்தியாவில் நடந்த முதல் ஐ.பி.எல். தொடரில் டெக்கான் சார்ஜர்ஸ் அணி வீரர் ஆர்.பி.சிங், மும்பை இந்தியன்ஸ் வீரர் பொலக் ஆகியோர் மிதவேகத்தில் பந்துவீசி அதிக விக்கெட்டுகளை வீழ்த்தினர். அதற்குப் பின் 'ருவென்ரி-20' போட்டிகளில் வேகத்தைக் குறைக்க ஆரம்பித்தனர்.

தற்போது நடக்கும் மூன்றாவது ஐ.பி.எல். தொடரில் மலிங்கா (மும்பை), சகிர்கான் (மும்பை), சமிந்தவாஸ் (டெக்கான்), வினய் குமார் (பெங்களூர்), பிரவீண் குமார் (பெங்களூர்) உள்ளிட்ட வீரர்கள் மிதவேகத்தில் பந்துவீசி விக்கெட் வேட்டை நடத்தி வருகின்றனர்.

இது தவிர, தாங்கள் சார்ந்த அணிகளின் வெற்றிக்கு கைகொடுத்து வருகின்றனர். இது குறித்து முன்னாள் இந்திய அணிக் கப்டன் சுனில் கவாஸ்கர் கூறுகையில்;

'ருவென்ரி-20' போட்டிகளில் பந்தின் வேகத்தைக் குறைத்து வீசுவதே பலன் கொடுக்கிறது. அதிவேகமாகப் பந்துவீசும்போது அது துடுப்பாட்ட வீரர்களுக்குச் சாதகமாக அமைந்துவிடுகிறது. குறைவான வேகத்துடன் துல்லியமாகப் பந்துவீசும் பந்துவீச்சாளர்களைக் கொண்டிருக்கும் அணி, இவ்வகைப் போட்டிகளில் எளிதில் சாதிக்கலாம்' என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ‘மங்கூஸ்’ மீது ஆசை



சென்னை சுப்ப கிங்ஸ் அணியின் ஹைடனை தொடர்ந்து மும்பை இந்தியன்ஸ் அணியின் போலார்ட்டுக்கும் ‘மங்கூஸ்’ வகை துடுப்புமட்டை மீது ஆர்வம் ஏற்பட்டுள்ளது.

மூன்றாவது ஐ.பி.எல். தொடர் இந்தியாவில் நடக்கிறது, இதில் சென்னை சுப்ப கிங்ஸ் அணியின் முன்னாள் அவுஸ்திரேலிய வீரர் ஹைடன் ‘மங்கூஸ்’ வகை துடுப்புமட்டையைப் பயன்படுத்தி வருகிறார். ‘ருவென்ரி-20’ போட்டிகளில் அதிரடியாக ஆடி ஓட்டங்களைக் குவிக்க நினைப்பவர்களுக்கு இவ்வகை துடுப்புமட்டை கைகொடுக்கும் என்பதால் இதன் மீது மும்பை இந்தியன்ஸ் அணியின் சகலதுறை வீரர் போலார்ட்டுக்கு மோகம் ஏற்பட்டுள்ளது.

இது குறித்து போலார்ட் கூறியதாவது;

பொதுவாக ‘ருவென்ரி-20’ போட்டிகளில் அதிரடி ஆட்டத்தை வெளிப்படுத்தினால் மட்டுமே அதிக ஓட்டங்களை எடுக்க முடியும். எனவே, அதிக ஓட்டங்களைக் குவிக்க நினைப்பவர்கள் ‘மங்கூஸ்’ வகை துடுப்புமட்டையைப் பயன்படுத்தலாம். இருப்பினும் அடுத்துவரும் போட்டிகளில் எனது சொந்த துடுப்புமட்டையை உபயோகப்படுத்தவுள்ளேன். தேவைப்படும் பட்சத்தில் ஒரு சில போட்டிகளில் ‘மங்கூஸ்’ வகைத் துடுப்புமட்டையைப் பயன்படுத்தத் திட்டமிட்டுள்ளேன்.

சச்சினுடன் விளையாடுவது உற்சாகமளிக்கிறது. சென்னை அணிக்கு எதிரான போட்டியில் இவருடன் விளையாடியது சிறந்த அனுபவமளித்தது. துடுப்பெடுத்தாடும்போது இவர் சக வீரர்களுக்குத் தேவைப்படும் பட்சத்தில் ‘ரிப்ஸ்’ வழங்குகிறார். எதிரணியின் பந்துவீச்சைச் சரியாகக் கணித்து விளையாடும் இவர் உண்மையிலேயே ‘மாஸ்டர் பேட்ஸ்மேன்’ தான்.

அடுத்த ஆண்டு நடக்கவுள்ள 4 ஆவது ஐ.பி.எல். தொடரில் மேற்கிந்திய அணியின் முன்னாள் கப்டன் பிரைன் லாரா பங்கேற்க வேண்டும். ரினிடாட் அணி சார்பில் அவருடன் இணைந்து விளையாடியுள்ளேன்.

ஐ.பி.எல். தொடரில் இம்முறை எங்கள் மும்பை இந்தியன்ஸ் அணி கிண்ணத்தை வெல்ல அதிகவாய்ப்புள்ளது. துடுப்பாட்டம் பந்துவீச்சில் சிறந்த வீரர்கள் மும்பை அணியிலிருப்பது வெற்றிக்கு முக்கிய பங்கு வகிக்கிறதெனவும் தெரிவித்தார்.






# துணிவே துணை

மூன்றாவது ஐ.பி.எல். தொடரில் டில்லி அணிக்காகத் தனது முதல் அதிரடி சதமடித்து அசத்தியவர் அவுஸ்திரேலியாவின் டேவிட் வார்னர். இவரது இந்த ஆட்டம்தான் கொல்கத்தாவுக்கு எதிரான போட்டியை வெல்ல உதவியது. தனது மிரட்டலான ஆட்டம் குறித்து வார்னர் அளித்த பேட்டி;

★ தொடக்க வீரராகக் களமிறங்கும் போது உங்கள் மனநிலை எப்படி இருக்கும்?

முதலில் அணிக்காக ஏதாவது செய்ய வேண்டும் என்ற எண்ணம் மனதில் இருக்கும். அதிர்ஷ்டவசமாக ‘ருவென்ரி-20’ போட்டிகளில் எப்படி வேண்டுமானாலும் அடித்து விளையாடலாம் என்ற நிலையுள்ளது. முதல் ஆறு ஓவர்களில் அடித்து ஓட்டங்க்ள் குவித்து பின் கடைசிவரை நிலைத்திருந்தால் அதிக ஓட்டங்கள் குவிக்கலாம். இந்தப் பாணியில்தான் கொல்கத்தாவுக்கு எதிராக எனது முதல் சதமடித்தேன்.

★ உங்களது ‘ஷொட்’ களைப் பார்க்கும்போது எளிதாக அடிப்பதுபோல் உள்ளதே?

பந்துவீச்சாளர்கள் கையிலிருந்து 150 கி.மீ. வேகத்தில் வரும் பந்தை திருப்பி வேகமாக அடிப்பது என்பது அவ்வளது எளிதானதல்ல. மணிக்கணக்கில் பயிற்சி செய்தால் இது எளிது.

★ தொடக்க வீரருக்கு உள்ள தகுதி என்ன?

துணிச்சல் தான் முக்கியம். எப்படியும் விரைவில் முதல் பவுண்டரியை அடித்துவிட வேண்டும். அடுத்த வாய்ப்புக்காகக் காத்திருக்கக் கூடாது. பிறகு எல்லாம் நன்றாக அமைய ரசிகர்களுக்கு விருந்து படைக்கலாம். அப்புறம் நீங்கள்தான் ‘ஹீரோ’.

★ கிரிக்கெட்டில் புதியவகை ‘ஷொட்’ குறித்து...

பொதுவாக எல்லோரும் விக்கெட் காப்பாளரின் தலைக்கு மேலால் அடிக்கும் ‘ஸ்கூப்’ ‘ஹொட்’ போன்று புதிதாக ஏதாவது கண்டு பிடிக்கிறார்கள். ஆனால், என்னைப் பொறுத்தவரையில், பழைய முறையில் அடித்து விளையாடுவதுதான் சிறந்தது. திட்டமிட்டு அதற்கான சரியான பந்துவரும் வரை காத்திருப்பேன்.

★ ஒவ்வொரு சிறந்த வீரரும் அவர் துடுப்புமட்டையைத் தேர்வு செய்வதைப் பொறுத்து அன்றைய ஆட்டம் அமைகிறது என்கிறார்கள். உங்களுக்கு எப்படி?

களத்தில் இறங்கும் முன் எந்தத் துடுப்புமட்டையைத் தேர்வு செய்வதென தேவையற்ற பரபரப்பு ஏற்படுவது நிஜம் தான். இருப்பினும் எனது ‘கிட் பேக்கில்’ ஒன்றுக்கும் மேற்பட்ட துடுப்புமட்டைகளை எடுத்துச்செல்வேன். தவிர, பயிற்சிக்கெனத் தனியாகத் துடுப்புமட்டை வைத்திருப்பேன்.

★ செவாக், கம்பிர், டில்ஷான் மற்றும் உங்களுக்கிடையே போட்டி ஏற்படுமா?

அப்படியெல்லாம் ஒன்றுமில்லை. ஆனால், இம்முறை யார் அதிக சிக்ஸர் அடிக்கிறார்கள் என்று ஒரு போட்டி வைத்துள்ளோம். இதில் யார் வெற்றி பெறுகிறார்கள் என்பது தெரியவில்லை.

★ கடந்த ஆண்டு கம்பிர் இப்போது செவாக்குடன் களமிறங்குகிறீர்கள். யார் உங்களுக்குப் பொருத்தமான ஜோடி?

யாருடன் களமிறங்குகிறேன் என்பதை விட எனக்குக் கொடுக்கப்பட்ட சவாலை ஏற்று சாதிக்க முயற்சிப்பேன். மற்றப்படி இவர்களுடன் இணைந்து விளையாடுவது மகிழ்ச்சியாகவுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாவிகளைத் தண்டிப்பதாக கூக்குரலிட்டவாறு விமானத்துடன் காரை மோதிய நைஜீரியர்

பாவிகளைத் தண்டிப்பதற்காக இயேசு நாதர் தன்னை அனுப்பியதாகக் கூறும் நைஜீரியர் ஒருவர் விமான நிலையத்தில் தனித்து நின்ற விமானமொன்றுடன் தனது காரை மோதியுள்ளார்.

நைஜீரியாவின் தென்கிழக்குப் பகுதியிலுள்ள விமான நிலையமொன்றில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவத்தில் எவரும் காயமடையாத அதேவேளை, நைஜீரியா பாதுகாப்புப் பிரச்சினைகள் எதனையும் கொண்டிருக்கவில்லையென விமான நிலையப் பேச்சாளர் கூறுகிறார்.

ஆனால், அமெரிக்க விமானத்தைக் குண்டுவைத்து தகர்க்க முயன்ற நைஜீரியர் ஒருவர் கைது செய்யப்பட்டதைத் தொடர்ந்து பாதுகாப்பை முன்னேற்ற வேண்டிய நாடுகளின் பட்டியலில் நைஜீரியாவும் இடம்பெற்றுள்ளது.

இந்நிலையில், தமது அனைத்து விமான நிலையங்களிலும் தேவையான பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதால் தமக்கு எந்தவித பிரச்சினைகளும் ஏற்படவில்லையென விமான சேவை அதிகார சபையின் பேச்சாளர் கூறியுள்ளார்.

கலபார் சர்வதேச விமான நிலையத்தின் இரு பாதுகாப்புக் கதவுகளையும் உடைத்துக்கொண்டு காரைச் செலுத்திவந்த சாரதி அங்கிருந்த விமானமொன்றுடன் காரை மோதியதாகவும் பின்னர் அவர் கைதுசெய்யப்பட்டதாகவும் விமான நிலையத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

நைஜீரியர்கள் அனைவரும் பாவம் செய்தவர்கள் எனவும் இவர்கள் தமது பாவங்கள் தொடர்பில் வருத்தப்பட வேண்டும் அல்லது அழிக்கப்பட வேண்டும் எனவும் கூக்குரலிட்ட இச்சந்தேகநபர் தான் இயேசுநாதரினால் அனுப்பப்பட்டவரெனக் கூறியதாக சம்பவ இடத்திலிருந்த செய்தியாளரொருவர் தெரிவித்துள்ளார்.

இவர் தொடர்ந்தும் அதிகாரிகளால் விசாரணை செய்யப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, மோதப்பட்ட விமானம் லாகோஸிலிருந்து வந்து தலைநகர் அபுஜா செல்வதற்காக இங்கு தரித்து நின்றதெனவும் சம்பவநேரம் விமானத்திலிருந்த அனைவரும் வெளியேற்றப்பட்டிருந்ததால் எவரும் காயமடையவில்லை எனவும் தெரிவிக்கப்படுவதுடன், இச்சம்பவத்தின் பின்னரும் எவ்வித பாதிப்புமின்றி விமானம் தனது பயணத்தைத் தொடர்ந்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சர்வதேச வலம்

ச.துஷ்யந்தினி



உலகம் பூராகவுள்ள கத்தோலிக்கர்கள் நேற்று பெரிய வெள்ளிக்கிழமையை அனுஷ்டித்ததை முன்னிட்டு பிலிப்பைன்ஸில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் இயேசுநாதர் சிலுவையைச் சுமக்கும் காட்சி சித்திரிக்கப்படுவதைக் காண்கிறீர்கள்.

# வறுமையை எதிர்த்துப் போரிடும் ஆயுதங்களில் ஒன்றாக கருத்தடை

## கத்தோலிக்க பேராயர் கூறுகிறார்

மூன்றாம் உலக நாடுகளில் வறுமையை எதிர்த்துப் போரிடுவதற்கு கருத்தடை உதவுவதாக கத்தோலிக்க பேராயரொருவர் தெரிவிக்கிறார்.

பி.பி.சி.க்கு இதனைத் தெரிவித்துள்ள வெஸ்ட் மினிஸ்டர் பேராயரான வின்சென்ட் நிக்கொலஸ் வறிய நாடுகளிலுள்ள மக்களை கருத்தடைச் சாதனங்கள் ஏன் கவருகின்றன என்பதைத் தான் புரிந்துகொண்டுள்ளதாகக் கூறுகிறார்.

கருத்தடை உயிரின் உருவாக்கத்திற்கான உரிமையில் தலையிடுவதாகக் கருதும் தேவாலய திருச்சபை இதனைக் கடுமையாக எதிர்ப்பதுடன், கருத்தடைச் சாதனங்களைப் பயன்படுத்துவது பாவகரமான செயலெனவும் வலியுறுத்தி வருகிறது.

ஆனால்,அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளிலுள்ள பெண்கள் கருவுறுவதைக் கட்டுப்படுத்துவதற்கு இச்சாதனங்கள் மிகவும் அத்தியாவசியமானவையென உதவி அமைப்புகள் தெரிவிக்கின்றன.

ஆனால், எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அனைத்துக் குழந்தைகளும் கடவுளின் கொடையாகக் கருதி வரவேற்கப்பட வேண்டுமென வாதாடி வரும் தேவாலய திருச்சபை பிறப்பைக் கட்டுப்படுத்த எடுக்கப்படும் நடவடிக்கைகளைக் கடுமையாக விமர்சித்து வருகிறது.

இந்நிலையிலேயே கருத்தடைக்கான நிலைமைகளைப் புரிந்துகொண்டுள்ளதாகக் கூறியுள்ள பேராயர் நிக்கொலஸ். கருத்தடையைத் தடுப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும் வறிய நாடுகளில் பிறப்பு வீதம் வேகமாக அதிகரிப்பதைச் சுட்டிக்காட்டியுள்ள அதேவேளை, ஆண்களின் அழுத்தத்திற்கு முகம் கொடுக்கும் பெண்கள் குறுகிய கால பாதுகாப்பை ஏன் நாடக்கூடாதெனவும் கேள்வியெழுப்பியுள்ளார்.

மேலும், இப் பிரச்சினைக்கு நீண்டகால தீர்வு அவசியமென்பதை வலியுறுத்தியுள்ள பேராயர் நிக்கொலஸ் , வறுமையைத் தீர்ப்பதற்கான வழியைக் கண்டறிந்து மக்களுக்கு சிறந்த பாதுகாப்பை வழங்கினால் பிறப்பு வீதம் தானாகக் குறைவடையுமெனவும் தெரிவிக்கிறார்.

இது குறித்து தனது நிலைப்பாட்டை வெளியிட்டுள்ள கத்தோலிக்கப் பத்திரிகையொன்று கருத்தடை தொடர்பில் சிரேஷ்ட கத்தோலிக்க மதகுரு ஒருவரிடமிருந்து மென்போக்கான சமிக்ஞை வெளிவந்துள்ளதாகத் தெரிவித்துள்ளது.

இதேவேளை, கத்தோலிக்க பாதிரிமாரால் மேற்கொள்ளப்பட்டதாகக் கூறப்படும் சிறுவர் பாலியல் துஷ்பிரயோகக் குற்றச்சாட்டுக் குறித்தும் கருத்துத் தெரிவித்துள்ள பேராயர் நிக்கொலஸ்;

இங்கிலாந்து மற்றும் வேல்ஸிலுள்ள தேவாலயங்களும் இவ்வாறான குற்றச்சாட்டுக்கு முகம் கொடுத்துள்ளன. பிரிட்டனில் பல நிறுவனங்கள் தமது நம்பிக்கைத் தன்மையை இழந்துள்ளன. இதுவரை அரசியல் மற்றும் நிதி நிறுவனங்கள் என்பனவே மக்களின் நம்பிக்கையை இழந்திருந்தன. தற்போது அந்தப் பட்டியலில் தேவாலயமும் இணைந்துள்ளது எனக் கூறியுள்ளார்.

மேலும், இவ்வாறான பிரச்சினைகளுக்கு மத்தியிலும் இங்கிலாந்திலுள்ள தேவாலயங்கள் உண்மைத் தன்மையை உறுதிப்படுத்தி வருவதாகக் கூறியுள்ள பேராயர் எங்கு தவறு இழைக்கப்பட்டிருக்கிறது என்பதைக் கண்டறிவதிலும் தார்மீக அடிப்படைகளைப் பேணுவதிலும் நேர்மையுடனும் வெளிப்படைத் தன்மையுடனும் தேவாலயங்கள் செயற்படுவதாகக் கூறியுள்ளார்.

இதன் அடிப்படையில் நோக்கினால் அண்மைக்காலமாக கத்தோலிக்க தலைமைப்பீடமான வத்திக்கான் உள்ளிட்ட தேவாலய திருச்சபைகளின் நிலைப்பாட்டில் சற்று மென்போக்கான நிலைமை காணப்படுவதை அவதானிக்க முடிகிறது.

அண்மையில், அயர்லாந்து பாதிரிமாரின் துஷ்பிரயோகங்கள் தொடர்பில் பரிசுத்த பாப்பரசர் 16 ஆம் பெனடிக்ற் பாதிக்கப்பட்டவர்களிடம் பகிரங்க மன்னிப்புக் கோரியிருந்த அதேவேளை, இதற்குச் சிறிது காலத்திற்கு முன்னர் அதிருப்தியுற்ற அங்கிலிக்கன் திருச்சபை உறுப்பினர்களை கத்தோலிக்கத்தில் இணைப்பதற்கும் வத்திக்கான் இணங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

எது எப்படியிருப்பினும் கருத்தடையைக் கடுமையாக எதிர்க்கும் திருச்சபையின் சிரேஷ்ட மதகுரு ஒருவர் சூழ்நிலையைப் புரிந்துகொண்டு தமது நிலைப்பாட்டை மாற்ற முன்வந்திருப்பது வரவேற்கத்தக்க விடயமாகக் கருதப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'எனக்குப் பிறகு எவருமே கனவுக்கன்னியில்லை'

இந்தித் திரையுலகில் கொடி கட்டிப் பறந்த நடிகை ஹேமமாலினி தனக்கு 62 வயதாகிவிட்டபோதிலும் கனவுக்கன்னி (Dream Girl)என்ற புகழ் இன்னமும் தனக்கே இருப்பது குறித்துப் பெரும் மகிழ்ச்சியடைகிறார்.

மூன்று தசாப்தங்களுக்கும் அதிகமான காலமாக தனது நடிப்பினாலும் கவர்ச்சியினாலும் ரசிகர்களைக் கவர்ந்திழுத்த ஹேமமாலினி தனக்குப்பிறகு கனவுக்கன்னியென்ற பெயரை இதுவரை வேறு நடிகைகள் தட்டிக்கொள்ளாதது குறித்து வியப்புத்தெரிவிக்கின்றார்.

1960களில் திரையுலகில் பிரவேசித்தபோது ஹேமமாலினியை கனவுக்கன்னியென்று ரசிகர்கள் புகழ்ந்தனர்.அதற்குப் பிறகு பொலிவூட்டில் நீண்டகாலம் செல்வாக்குமிக்க நடிகையாக மிளிர்ந்த அவர் நடிகர் தர்மேந்திராவை காதலித்து திருமணம் செய்துகொண்டார்.இவர்களுக்கு இரு மகள்மார் இருக்கிறார்கள். ஹேமமாலினி சிறந்த ஒரு நாட்டியத் தாரகையும் கூட.

'திரையுலகில் பல அழகான இளம் நடிகைகள் இருக்கிறார்கள். அவர்களில் எவரையுமே கனவுக் கன்னியென்று ரசிகர்கள் ஏன் அழைக்கிறார்கள் இல்லை என்று என்னை நீங்கள் கேட்கிறீர்கள்.நான் எவ்வாறு அதற்குப் பதிலளிக்கமுடியும்' என்று ரைம்ஸ் ஒப் இந்தியா செய்தியாளர்களுடன் பேசியபோது ஹேமமாலினி இவ்வாறு கேள்வியெழுப்பினார்.



தற்போதுள்ள நடிகைகளில் கனவுக்கன்னி என்று அழைக்கப்படுவதற்கு பொருத்தமானவர் என்று யாரை நீங்கள் நினைக்கிறீர்கள் என்று ஹேமமாலினியிடம் கேட்கப்பட்டபோது 'பொலிவூட்டில் பல கனவுக்கன்னிகள் இருக்கிறார்கள்.எதற்காக ஒருவரின் பெயரைக் குறிப்பிடுமாறு என்னைக் கேட்கிறீர்கள்? கத்ரீனா கைப் பார்வைக்கு அழகான பெண்.கரீனா கபூரும் ரம்மியமானவர்.ஐஸ்வர்யா ராய் அழகான ஒரு பெண்' என்று அவர் பதிலளித்தார்.

62 வயதாகிவிட்டபோதிலும் ஹேமமாலினி தனது உடலழகை இப்போதும் நன்றாகவே பேணுகிறார்.கவர்ச்சியாகவும் இருக்கிறார். கனவுக்கன்னியென்ற புகழ் என்றென்றைக்கும் தன்னிடமே இருக்குமென்று பெருமையுடன் அவர் கூறுகிறார்.

'பொலிவூட்டில் சகல நடிகைகளுமே அழகாகத்தான் இருக்கிறார்கள்.ஆனால் கனவுக்கன்னியாக நானே தொடர்ந்து விளங்குகிறேன்.அது என்னுடனே இருக்கப்போகிறது.நான் அதைக் கேட்டுப் பெற்றுக்கொள்ளவில்லை. அதனால், அது என்னுடனேயே இருக்கிறது.நான் இருக்கும் வரை கனவுக்கன்னியென்ற புகழும் என்னுடனேயே இருக்கும்' என்று அவர் கூறுகிறார்.

இப்பத்திரிகை நொதேர்ன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட்டாரால் யாழ்ப்பாணம், கே.கே.எஸ். வீதி 336ஆம் இலக்கத்தில் 2010 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 03ஆம் திகதி சனிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org